விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 08 சனிக்கிழமை (22.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை இன நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை

### அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் கருத்து



(வோசிங்டன்)

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னேற்றம் அடையவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னேற்றங்கள் காணப்படும் அளவுக்கு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்களில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. உயரதிகாரி கதரீன் அமைச்சர் பஸில் சந்திப்பு

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகமும் அவசர நிவாரணப் பிரதி ஒருங்கிணைப்பாளருமான கதரீன் பிராக் நேற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரை (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை

### இலங்கைக்கு வந்த ஐ.நா.அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக் குடியேறியவர்களில் பெரும்பான்மையானோருக்கு அடிப்படைத் தேவைகளான புகலிடம், நீர் மற்றும் சுகாதார சேவைகள் என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும் அவசர உதவிகளுக்கான பிரதி இணைப்பாளருமான கதரீன் பிரேக் நேற்றுத் தெரிவித்தார்.**

தற்போதைய மனிதாபிமான உதவிகளைக் கண்காணிப்பதற்காகவே தான் இலங்கை வந்ததாகவும் தனது கண்காணிப்பின்படி அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கும் அவசர மனிதாபிமான உதவிகள் தேவை எனவும் (20ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பல் விவகாரம் முக்கிய நபர் கைதானார்

(ரொரன்ரோ)

கனடாவுக்கு 492 ஈழத் தமிழர்களை ஏற்றிச்சென்ற எம்.வி.சன் சீ கப்பலின் பயணத்துடன் தொடர்புடைய முக்கிய நபர் ஒருவரை தாம் கைது செய்திருப்பதாக தாய்லாந்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

48வயதான நடேசன் ஜீயநந்தன் என்பவருடன் மேலும் ஏழுபேரை கடந்த ஞாயிற்றுக்கிழமை தாம் கைதுசெய்திருப்பதாகவும் தாய்லாந்துப் பொலிஸார் கூறியுள்ளனர்.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 200 ஈழத் தமிழர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது வழிமறிக்கப்பட்ட கப்பல் ஒன்றின் பின்னணியில் ஜீயநந்தன் செயற்பட்டதாக தாய்லாந்து அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.நிபுணர் குழுவானது ஜனாதிபதியைச் சந்திக்காது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழுவானது அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்காது என்று ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்டின் நெசர்கி தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சந்திப்பு ஒன்று குறித்து ஐ.நா.சபையின் நிபுணர் குழு கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத பிரசாரங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் சுவரொட்டி மற்றும் பதாகை போன்ற சட்டவிரோத பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு எதிராக பொலிஸாரால் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

பல மாவட்டங்களில் வேட்பாளர்கள் ஏற்கனவே சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர் எனவும் இதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சுவரொட்டிகளை அகற்றுவதற்கு தேவையான ஊழியர்கள் இல்லாமையினால் பொலிஸாரே (20ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் ஒரு மாதத்திற்கு நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் 118மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதமின்றி வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அவசரகால சட்ட நீடிப்பிற்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 05வாக்குகளும் அளிக்கப் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த தனிப்பட்ட விஜயமே மேற்கொண்டுள்ளார்

### அரசு விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே அமெரிக்கா சென்றுள்ளார் என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவுக்கு பதிலாக அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் பொறுப்பை அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா ஏற்றிருந்தார்.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளரும் ஜனாதிபதியுடன் சென்றுள்ளதைச் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர் ஒருவர் இந்தப் பயணத்தின் நோக்கம் என்னவென்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், ஜனாதிபதி தனிப்பட்ட விஜயமே மேற்கொண்டுள்ளார். அவர் சில சந்தர்ப்பங்களில் செயலாளரை அழைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழக சட்டத்தரணி விடுதலை!

(சென்னை)

கயல் என்கிற அங்கயற்கன்னி என்னும் இளம் பெண்ணையும் அவரது உறவினரான திருமலை என்பவரையும் இலங்கைப் பொலிஸார் விடுவித்துள்ளனர்.

கொழும்பில் விடுவிக்கப்பட்ட இவர்கள் நேற்றிரவு தமிழகம் பயணமாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த தமிழ்த் தேசிய இயக்கத்தின் முன்னோடியும் மறைந்த தமிழ் அறிஞருமான பெருஞ்சித்திரனாரின் பேர்த்தியும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞருமான கயல் என்கிற அங்கயற்கன்னி என்னும் இளம் பெண்ணையும் அவரது உறவினரான திருமலை என்பவரையும் பொலிஸார் வடக்கு மாகாணம் ஒன்றின் சோதனைச்சாவடியில் வைத்து கைதுசெய்திருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன.

முறைப்படி இலங்கைக்கான சுற்றுலா விசா பெற்று இலங்கை சென்றவரை இலங்கை இராணுவம் கடத்திச் சென்றுள்ளதாக தெரியவந்தது. இந்தச் செய்தி தமிழக வழக்கறிஞர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப் (20ஆம் பக்கம் பார்க்க)





இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக்கிளை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, இந்தியன் வங்கியின் தலைவர் கி.எம்.பாசின் ஆகியோர் நாடாவெட்டி வங்கியை திறந்து வைப்பதையும், யாழ்.இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மங்கல விளக்கேற்றுவதனையும் வங்கியின் தலைவர் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

## திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

1.இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞான சான்றிதழ் மற்றும் கலைமாணி பட்ட 2011/2012 கல்வியாண்டிற்கான பதிவுகள், மீள் பதிவுகள் இன்று முதல் 26.01.2011வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம் பெறும் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * *

2.இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி 2009/2010 கல்வியாண்டிற்கான இறுதிப்பரீட்சைகள் இம்மாதம் 22,29,30 ஆகிய திகதிகளில் யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம் பெறும்.

* * *

இலங்கைத் திறந்த பல்கலைகழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடத்தப்படும் சுற்றுலா துறையும், விடுதிச்செயற்பாடுகளும் கற்கை நெறி 2011/2012ஆம் கல்வியாண்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை இன்று முதல் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## கைவிடப்பட்ட வாகனங்கள் இதுவரை கிடைக்காதவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இறுதிக் கட்டப் போரின் போது கைவிடப்பட்ட வாகனங்கள், மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்களின் வாகனம், மோட்டார் சைக்கிள் தொடர்பான விபரத்தினை உரிமையாளர் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம்,

தொலைபேசி இலக்கம், கிராம சேவையாளரின் பிரிவும் பதிவு இலக்கமும், பதிவு இலக்கம், இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம், வகை, வகுப்பு, நிறம், விசேட அடையாளங்கள் ஆகியவை அடங்கிய மாதிரிப் படிவத்தினைத் தயாரித்து கைவிடப்பட்ட வாகனங்களை மீள வழங்கும் நிலையம், அரிவு ஆலை, திருநகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-2)

## கருகம்பனை மக்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கருகம்பனைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணிக்கு தங்களின் வீட்டு உறுதியுடன் கருகம்பனை வாசிகசாலை சந்தியில் ஒன்றுகூடுமாறு கருகம்பனை மீள் குடியேற்ற அமைப்பின் தலைவர் கேட்டுள்ளார். (ந)






## மரண அறிவித்தல்

### சவரிமுத்து திரேசம்மா

(குடத்தனை கிழக்கு, குடத்தனை)

குடத்தனை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து-திரேசம்மா அவர்கள் 21.01.2011 நேற்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு- லேனா தம்பதியரின் அன்பு மகளும் சவரிமுத்துவின் அன்பு மனைவியும் ஜே.மேரிகொலஸ்ரிக்கா, ச.தவராசா (பிரான்ஸ்), சி.தேவராணி, ச.மதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சி. ஜேசுதாஸ், த.குமாரி (பிரான்ஸ்), சிவகுமார், ம.சுஜாதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-2235)

தகவல்
ச.மதீஸ்வரன் (மகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 23.12.2010 அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் சின்னத்தம்பி முத்துகுமாரு
அவர்களின் வீட்டுக்கிருத்தியம்
இன்று 22.01.2011 (சனிக்கிழமை)
மு.ப.10 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தங்கள் குடும்பசகிதம்
வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்து
கொள்ளும்வண்ணம் அன்புடன்
அழைக்கிறோம்.



ஆலடி வீதி, கோண்டாவில். குடும்பத்தினர்.

(3563)

# இன்று ஒரு தகவல்

## உணவின் மகிமை

மகாபாரத யுத்தம் முடிந்ததும் தருமர் சக்கரவர்த்தியானார். பீஷ்மர் யுத்தபூமியில் அம்புப் படுக்கையில் படுத்திருந்தார்.

அவர் உயிர் துறப்பதற்காக சூரியன் வடதிசையை அடையும் உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் தர்மர் கண்ணனிடம் அனுமதி வாங்கிக் கொண்டு பீஷ்மரை பார்ப்பதற்காக குருஷேஷ்திரத்துக்கு வந்தார்.தம்பிமார்கள், திரௌபதி ஆகியோரும் கூட வந்தார்கள்.

பீஷ்மரை பார்த்து எல்லோரும் வணங்கினார்கள் .

யுதிர்ஷ்டிரர் பீஷ்மரிடம் வர்ணம், ஆச்சிரமம் மக்கள் கடமை, அரசரின் கடமை போன்ற விடயங்களைப்பற்றி கேட்டுக் கொண்டிருந்தார். பீஷ்மரும் அதற்குத் தகுந்த பதில் சொல்லிக் கொண்டிருந்தார். இப்படி பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு தர்மோப தேசம் செய்து கொண்டிருந்தபோது திரௌபதிக்கு சிரிப்பு வந்து விட்டதாம். அந்தச் சத்தத்தைக் கேட்ட பீஷ்மர் தர்மோப தேசத்தை இடையில் நிறுத்தி விட்டு திரௌபதியைப் பார்த்து,

"மகளே! ஏனம்மா சிரித்தாய்? என்று கேட்டார்.

''என்னை மன்னித்து விடுங்கள் பிதாமகரே. ஏதோ தெரியாமல் சிரித்துவிட்டேன்'' என்றார் அவர்.

''குழந்தாய்! உன்னைமாதிரி உள்ள உத்தமப் பெண்கள் காரணமில்லாமல் பலர் முன்னிலையில் இப்படி சிரிக்க மாட்டார்கள். வெட்கப்படமால் விடயத்தைச் சொல்'' என்றார் அவர். திரௌபதி கண்கலங்கினார் .சுவாமி நீங்கள் இப்பொழுது இவ்வளவு தர்மோபதேசம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இதைப்பார்க்கும் போது எனக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்து விட்டது.அதாவது இன்றைக்கு தர்மத்துக்கு இவ்வளவு சிறந்த விளக்கத்தை கொடுக்கும் இதே பிதாமகர் அன்றைக்கு கௌரவர் சபையில் துச்சாதனன் என்னை மன பாங்கப்படுத்த முயற்சி செய்த போது... வாய் மூடி மௌனியாக தானேஇருந்தார். இந்த சமயத்தில் இவ்வளவு ஞானத்தையும் எங்கே விட்டு வைத்திருந்தார்?

ஒருவேளை அதற்குப் பின்னர் தான் இந்த தர்மவிடயங்களையெல்லாம் கற்றுக் கொண்டாரா? என்று யோசித்தேன் அதுதான் சிரிப்பு வந்ததுவிட்டது. என்னை மன்னியுங்கள் என்றார்.பிதாமகர் இதற்கு அமைதியாக பதில் சொன்னார்:

''குழந்தாய்! உன்னுடைய கேள்வி நியாயமானது தான். இதில் உன்னை நான் மன்னிப்பதற்கு என்னம்மா இருக்கிறது? துரியோதனன் சபையில் நான் இருந்தபோது எனக்கு அந்த அறிவு இருக்கத்தான் செய்தது.

ஆனால்... துஷ்டனான துரியோதனனின் உணவைநான் அப்பொழுது சாப்பிட்டுக் கொண்டு வந்தேன். அதன்காரணமாக என்னுடைய அறிவு மழுங்கிவிட்டது. நல்லது கெட்டதை பற்றி ஆலோசிக்க முடியாமல் போய்விட்டது. தீயவர்கள் தரும் உணவைசாப்பிட்டால் சாப்பிடுபவனின் மனமும் உடம்பும் கெட்டுப் போய்விடும் என்று சாஷ்திரமெல்லாம் சொல்கிறது. ஆனால் இப்பொழுது போரில் அர்ஜுனன் என் மீது எய்த அம்புகளால் என் உடம்பில் இருந்த இரத்தமெல்லாம் வெளியேறி விட்டதால் என்புத்தி தெளிந்துவிட்டது.

அதனால் தான் இப்பொழுது இந்த அளவுக்கு தர்மத்தின் தத்துவங்களை சரியாக எடுத்துச் சொல்ல முடிந்தது என்றார் பீஷ்மர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவெனில் யார் சாப்பிடக்கூப்பிட்டாலும் உடனே முண்டியடித்துக் கொண்டு கிளம்பிப் போய் முதல் பந்தியில் உட்கார்ந்துவிடக் கூடாது.

சாப்பிடக் கூப்பிடுபவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நல்லவர்களா? கெட்டவர்களா? என்று யோசிக்க வேண்டும். கெட்ட எண்ணத்துடன் போடும் சாப்பாடு புத்தியை மழுங்கடித்துவிடும்.

எத்தனை பேர் பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்களை விருந்துக்குக் கூப்பிட்டு சாப்பிட்டு முடித்த கையுடன் முக்கியமான பேப்பரில் கையெழுத்து வாங்கிவிட்டு விட்டுவிடுவார்கள். முக்கியமான பெரிய பொறுப்பில் உள்ளவர்களையெல்லாம் யாராவது சாப்பிடக்கூப்பிட்டால் கொஞ்சம் யோசிக்கவேண்டும்.

கூப்பிடுபவர்களின் மனதை புரிந்து கொண்டு அதன்பின் போவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும். சாப்பாட்டில் அவ்வளவு விடயம் இருக்கிறது.பீஷ்மருக்கோ இந்த நிலைமையானால் நாமெல்லாம் எம்மத்திரம்?

சிலசமயங்களில் சாப்பாடு புத்தியில் ஒரு தெளிவை உண்டாக்குவதுண்டு.ஒரு ஊருக்கு ஒரு பெரிய மகான் வந்தார். அவர் சாப்பிடுவதேயில்லை. எப்பொழுதாவது கொஞ்சம் தண்ணீர்-பால் அவ்வளவுதான் சப்பிடுவார். ருசியையெல்லாம் கடந்தவர்.

அவரிடம் எல்லோரும் போய் ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

அந்த ஊரில் உள்ள ஒரு ஹோட்டல் முதலாளி ஒருத்தர் அந்த மகானிடம் ஆசீர்வாதம் வாங்கப் போனார். அதற்கு முன் அந்தமகான் எழுந்து இவருடைய காலில் விழுந்துவிட்டார். ஹோட்டல் முதலாளி பதறிப் போய்விட்டார். "சுவாமி என்ன இது அபச்சாரம்! நீங்க தான் என்னை ஆசீர்வாதம் பண்ண வேண்டும். ஏனெனில் சிறிது காலத்துக்கு முன் நான் உங்கள் ஹோட்டலில் அக்கவுண்ட் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்கு நான் ருசிகளையெல்லாம் வெறுத்து ஞானி ஆவதற்கு காரணமே நீங்க தான் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடில்லை

## உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொண்வதற்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு நாடளாவிய ரீதியில் பாரிய தட்டுப்பாடு நிலவியதாக அனுரகுமார திஸாநாயக்க முன் வைத்த குற்றச்சாட்டினை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தேவையேற்படுமிடத்து மாணவர்கள் குறித்த விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் இவ் ஆண்டுக்கே அதிகமான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் அவற்றிலிருந்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் பி.ப ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக் கொடி தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளின் பின்னர் விசேட கூற்று ஒன்றினை முன்வைத்த ஜனநாயக தேசியக் கூட்டணியின் எம்.பி. யான அனுர குமார திஸாநாயக்க கூறுகையில்,

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு படிவம் ஒன்றுக்கு 300 ரூபா கட்டணமும் அறவிடப்பட்டது. ஆனாலும் இந்த விண்ணப்பப்படிவங்களுக்கு யாழ்ப்பாணம், கண்டி உட்பட நாடளாவிய ரீதியில் பாரிய தட்டுப்பாடு நிலவியது. எனவே மாணவர்களின் எதிர்காலக் கல்வி தொடர்பில் உயர்கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் பல்கலைக் கழக அனுமதி விண்ணப்பங்களைதேவையான அளவில் விநியோகிக் குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கூறுகையில், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2009 ஆம் ஆண்டில் 57ஆயிரத்து 794 விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விநியோகித்திருந்தது. அது 2010 ஆம் ஆண்டில் 62 ஆயிரத்து 300 ஆக அதிகரித்திருந்த அதேவேளை இவ் ஆண்டுக்கென 67 ஆயிரத்து 602 விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இது அதிகமானதொகையாகும். இதிலும் பற்றாக் குறை நிலவுமானால் அதனை நிவர்த்தி செய்வதற்கு உயர் கல்வி அமைச்சு தயாராகவே இருக்கின்றது. இதில் எந்த சிக்கலுமில்லை.

விண்ணப்பப் படிவங்கள் தேவைப்படும் மாணவர்கள் தகுந்த காரணங்களை உறுதிப்படுத்தி பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக் குழுவில் பெற்றுக் கொள்ள முடியும்.

தாமதமாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பப் படிவங்கள் உடன் உரிய காரணம் விளங்கப்பட்டிருப்பின் இது ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலும் பெறுபேற்றினை மீள் மீள் பரிசீலனைக்குட்படுத்தியுள்ள மாணவர்களிடமிருந்துகிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 330 | 400 | 350 | 300 |
| தக்காளி | 90 | 80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 90 | 80 | 90 | 90 |
| கரட் | 90 | 120 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 50 | 35 |
| புடோல் | 100 | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 130 | 130 |
| பாகற்காய் | - | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 160 | 90 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 280 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 | 70 |
| பீற்றூட் | - | - | - | - |
| கறிமிளகாய் | - | 260 | 280 | 300 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 150 | 160 | 180 | 180 |
| கத்தரிதம்புள்ள | - | 140 | 200 | 130 |
| கீரை - 1 பிடி | 25 | 40 | 40 | 35 |
| தேசிக்காய் | 40-50 | 50 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35-50 | 50 | 60 | 45 |

# இராசி பலன்

*22.01.2011*
*(தை 08, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*
*திருதியை முன்னிரவு 9.36 மணிவரை*
*மகம் முன்னிரவு 8.09 மணிவரை*
*இராகு காலம் 9.35-11.05மணிவரை*
*சுப நேரம் 3.35-5.05மணிவரை*
*அமிர்தசித்தம்.*

**மேடம்** புதிய தொழில் தொடர்பாக எடுத்த முயற்சி வெற்றி பெறும், பிள்ளைகளால் பெருமையடைவேண்டியநாள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**இடபம்** காலை நேரத்திலேயே இனிய செய்தி வந்துசேரலாம், வாகன யோகமுண்டு, வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்** சுபநிகழ்வுகளில் நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கோயில் பணிகளில் ஈடுபாடு காட்டுவீர்கள், உறவினர் உதவியால் வளர்ச்சி கூடும்.

**கடகம்** குடும்பத்தில் பெருமைப்படும் வகையில் சிலநிகழ்வுகள் நடைபெறலாம், தொழில் வளர்ச்சியுண்டு, புதிய பொருட்கள் சேர்க்கையுண்டு, வாக்குமேன்மையுண்டு.

**சிங்கம்** குடும்ப சுமை அதிகரிக்கும், பெரிய மனிதர்களை சந்திக்கும் சூழ்நிலை அமையலாம், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** அலைச்சல் அதிகரிக்கும், வியாபாரம் தொழிலில் பணியாளர்களை மாற்றும் சிந்தனை உருவாகலாம், சுப செலவுகள் ஏற்படலாம்,

**துலாம்** எதிர்பாராத வகையில் நண்பர்கள் ஒருவர் உதவி செய்ய முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பெருமையடைய வேண்டிய நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை திருப்திகரமாக அமையும், தொழில் வளர்ச்சி கூடும், சேமிப்புகள் உயரும்.

**தனுசு** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றும் நாள், வழிபாடு ஆனந்தம் வழங்கும், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்,

**மகரம்** பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரிக்க கணபதியை வழிபடவேண்டிய நாள்,

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், பொருளாதாரநிலை உயரும், விருந்துபசாரமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்குண்டு.

**மீனம்** தொழில் மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், போட்டியாக இருந்தவர்கள் மனம்மாறுவர்.

வளவன்



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இந்தியாவினால் 120 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சை இயந்திரம் நேற்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ் இயந்திரத்தை கையாளிப்பதையும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

## தற்செயல் நிவாரண கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பயனாளிகளுக்கான தற்செயல் நிவாரண முதலாம் கட்டக் கொடுப்பனவு சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கா.நாகம்மா கைதடி நுணாவில், த.தங்கமணி (புட்டவாரி, ஒழுங்கை, சரசாலை தெற்கு), ம.துஸ்யந்தினி (கரம்பைக் குறிச்சி மேற்கு), அ.தங்கமணி (கைதடி தெற்கு), அ.தங்கமலர் (கைதடி தெற்கு), சு.நளினி (கரம்பைக் குறிச்சி), கு.சுவேந்தினி (சரசாலை தெற்கு) ஆகியோரை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு அடையாளப்படுத்தும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கும்படி தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(நவாலி)

நவாலி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பழைய மாணவர்களை மட்டுமன்றி அண்மையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவுக்கு அன்பளிப்பு செய்தோர் அனைவரையும் பங்குபற்றுமாறு வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-26)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி நவிண்டில் பகுதியில் திருட்டு முயற்சியொன்று பொதுமக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

மேற்படி பகுதியில் திருடவந்த திருடர்களை அவதானித்த வீட்டு உரிமையாளர் தொலைபேசி மூலம் அயலவர்களுக்கு அறிவித்ததையடுத்து உடன் விரைந்த அயல் மக்கள் வீதிக்கு வந்ததையடுத்து திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இதனால் பாரிய கொள்ளைச் சம்பவம் தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

அல்வாய் கொள்ளியன்சீமா கண்ணகை அம்பன் மாதாங்கேணி ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.45 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

## புத்தூர் சந்தியில் பாதசாரிக் கடவை நிறுவ வேண்டியது அவசியமாகும்

### மக்கள் வலியுறுத்து

(பருத்தித்துறை)

புத்தூர் சந்தியில் பாதசாரிகள் கடவையொன்று நிறுவப்படவேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

முச்சந்தியைக் கொண்ட அப்பகுதியில் பாடசாலை, வைத்தியசாலை, பிரதேச சபை அலுவலகம், சந்தை என்பன இருப்பதையடுத்து பாதசாரிக் கடவைகள் வரையப்படவேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

தற்போது அப்பகுதியில் வீதி அகலிப்பு செய்யப்பட்டிருப்பதனால் வாகனங்கள் வேகமாகச் செல்வதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே வீதிவிபத்தைத் தவிர்த்துக் கொள்ள பாதசாரிக் கடவை அங்கு அவசியம் என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

## சடலம் இதுவரை உரிமை கோரப்படவில்லை

(கரவெட்டி)

வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் கடந்த 15 ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பொலிசாரால் மீட்கப்பட்ட சடலம் அடையாளப்படுத்துவதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த 20 ஆம் திகதி வரை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரனின் உத்தரவுக்கமைய பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

குறித்த சடலத்தின் கையில் கே.குப்புச்சாமி என்று பச்சை குத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சடலத்தை எவரும் உரிமை கோராமையால் குறித்த சடலம் இந்திய மீனவரின் சடலமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இதனால் நீதவான் இந்தியா தூதுரகம் ஊடாக தூத்துக்குடி கடற்தொழிலாளர் சங்கத்திற்கு அறியப்படுத்துமாறு தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

தவறும் பட்சத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி அரச செலவில் கருகம்பன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யுமாறும் நீதவான் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## வைர விழாவும் சிலை திறப்பும்

வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் வைர விழாவும் சிலைத்திறப்பு விழாவும் மற்றும் மாணவர்கள் கௌரவிக்கும் விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எ.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினரர்களாக தேசிய காச நோய் கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் டாக்டர் பி.டி அல்விஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பேராசிரியர் எம். நடராஜாசுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ் வரன், யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர். யமுனாந்தா மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகளான மு. திருநாவுக்கரசு, பா. சுப்பிரமணியன், யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம், வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் வி. செல்வராஜா, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் அமரர் கு. அப்புக்குட்டியாப்பிள்ளையின் சிலை திறப்பும் வைர விழா மலர் வெளியீட்டு நிகழ்வும் புலமைப் பரிட்சையில் சித்தியெய்திய மாணவர்கள், தேசிய மாகாண போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள் அனைவரையம் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-9-63)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்தில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் வணிகக்கல்வி பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல மர்வு சீமா நிறுவனத்தினரால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி யா/வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது.

✦ ✦ ✦

யாழ். மாவட்டத்தில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் பொருளியல் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு சீமா நிறுவனத்தினரால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி யா/வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-19)

## கருத்தரங்கு

யாழ்.முகாமையாளர் சம்மேளனமும் வடபிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கமும் இணைந்து இன்று சனிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை "கட்டட நிர்மாணத்துறையில் உயர் கல்வி வாய்ப்புக்கள்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு ஒன்றை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இக்கருத்தரங்கின் வளவாளராக பேராசிரியர் திருமதி சித்திரா வெடிக்கார கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

எனவே ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)




## 3 அங்குல மீன்முள் தொண்டையில் சிக்கியது

(கரவெட்டி)

உணவு உட்கொள்ளும் போது கீரிவகை மீன்முள் தொண்டைப் பகுதிக்குள் சிக்கியதால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 19 ஆம் திகதி மணற்காட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி நபர் தொண்டை வலி தாங்க முடியாமல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது வைத்தியர்கள் இவரின் தொண்டையிலிருந்து 3 அங்குல கீரி மீன் முள்ளை தந்திரமாக அகற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் மணற்காடு அந்தோனியார் தேவாயலயத்தைச் சேர்ந்த செம்பியம்பிள்ளை மரியதாஸ் (வயது 48) என்பவரே பாதிக்கப்பட்டவராவர். மற்றுமொரு சம்பவத்தில் கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த 19 வயது யுவதி ஒருவர் மாட்டிறைச்சி உட்கொண்டபோது 4 அங்குல மாட்டிறைச்சி எலும்புத்துண்டு தொண்டையில் சிக்கிவைத்தியசாலையில்அனுமதிக்கப்பட் டார்.

அதன்பின் சிகிச்சை மூலம் வைத்தியரினால் எலும்புத்துண்டு தொண்டையில் இருந்து சில தினங்களுக்கு முன் வெளியில் அகற்றப்பட்டது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-3-24)

## யாழ்.மாநகர சபையின் பொதுக்கூட்டம் திகதி மாற்றம்

மாநகரசபையின் இவ் ஆண்டுக்கான முதலாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என மாநகரசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் யுத்தம் முடிவுற்றபோதும் ஐந்து இலட்சம் மக்களுக்கு விடிவில்லை

## அகதிகள் அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டரை வருடங்கள் ஆகிவிட்ட போதிலும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பு, உதவிகள் அற்ற நிலையிலேயே உள்ளனர் என்று அகதிகள் உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த கால யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களில் 320 ஆயிரம் பேர் வரையானோர் இன்னும் அகதிகளாகவே வாழ்கின்றனர். 190 ஆயிரம் பேர் வரையானோர் மாத்திரமே சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டு இருக்கின்றனர்.

ஆனால் இவ்வாறு திரும்பிச் சென்றவர்களும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அல்லலுறுவதாகவும் இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இப்போதும் உள்ளன என்றும் இதனால் எப்போது கைது செய்யப்படுவர்? என்று தெரியாமல் மக்கள் அஞ்சுகின்றனர் என்றும் இவ்வமைப்பு குறிப்பிட்டு உள்ளது.

இராணுவ தேவைகளுக்காக பெரும்தொகைப் பணத்தை வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ஒதுக்கியுள்ளது என்றும் ஆனால் யுத்தப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி ஆகியவற்றுக்கான அரசின் நிதி ஒதுக்கீடு சொற்பமானதாகவே உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அமைப்புக்களால் வழங்கப்படுகின்ற உதவிகளைக்கூட அரசு மட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. அகதிகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் அரசின் நலன்புரி முகாம்கள் அடிப்படை வசதிகள் அற்றன என்றும் இவ்வமைப்பு கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# சமூக விஞ்ஞான போட்டிகள்

(அல்வாய்)

தேசியமட்ட சமூக விஞ்ஞான போட்டிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை தவறாது பங்குபற்றுமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# மட்டக்களப்பில் வீதி சீரமைக்க நாற்பத்தியொரு கோடி செலவு

மட்டக்களப்பில் நான்கு கிலோமீற்றர் பாதையொன்றைச் செப்பனிட நாற்பத்தியொரு கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளது.

மஹா ஓயாவிலிருந்து செங்கலடி வரையான நான்கு கிலோமீற்றர் பாதையைச் செப்பனிடவே நாற்பத்தியொரு கோடியே பதினெட்டு இலட்சத்து எழுபதாயிரம் ரூபா செலவிடப்பட்டதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குருநாகல்மாவட்டபாராளுமன்றஉறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் வாய்மூல கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த பாதை இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்திருந்தார். அவ்வாறெனில் ஒரு கிலோமீற்றர் பாதை யைச் செப்பனிட அரசாங்கம் அண்ணளவாக நூறு மில்லியன் தொகையைச் செலவிட்டுள்ளது. என்ன தங்கத்தை இழைத்து பாதையைச் செப்பனிட்டீர்களா என்று தயா சிறி ஜயசேகர குறுக்குக் கேள்வியெழுப்பி னார்.

அதற்கு யுத்தத்தின் காரணமாக பாதை முழுமையாக சேதமடைந்து போயிருந்த காரணத்தால் அதனைப் புனரமைப்பதற்கு அவ்வளவு தொகை செலவிடப்பட்டதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

வெள்ளம் காரணமாக பாதிப்படைந்த மக்களுக்கு உதவ சிங்கப்பூர் அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களை சிங்கப்பூர் அரசாங்கம் வழங்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவி வெள்ளத்தின் பின்னரான நிவாரண நடவடிக்கைகளுக்காக செலவிடப்படும் எனவும் மேர்சி எனப்படும் சிங்கப்பூர் மனிதாபிமான அமைப்பு இந்த விநியோக நடவடிக்கைகளை மேற்கோள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உட்பட மக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய நிவாரண பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் பாதிப்படைந்த மக்களுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி எஸ். ஆர். நாதன் தமது ஆழ்ந்த அனுதாபத்தினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கடந்த வருடம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி மீண்டும் தொடர்ச்சி யாக நடைபெறவுள்ளது.

நிதர்சன் கிறீம் கவுஸ் ஆதரவில் இச்சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.


இன்று நடைபெறும் போட்டியில் மைக்கல் அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதவுள்ளது. (ஸ்ரீ-3-10)



# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை நாகேந்திரம்

(சீவரத்தினம் -கடையப்பா)



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் நாவலடி உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகேந்திரம் (சீவரத்தினம்-கடையப்பா) அவர்கள் 20.01.2011 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நாகேந்திரம் - அசுவமாவின் அன்புக் கணவரும், அமரர் சிவகுருநாதன், புங்குடுதீவைச் சேர்ந்த சந்திராதேவி, பத்மாவதி(வட்டக்கச்சி), சரஸ்வதி (வட்டக்கச்சி), விமலாதேவி (அழகரத்தினம் வீதி, வட்டக்கச்சி), சுபத்திராதேவி (வட்டக்கச்சி), மலர் ஜயாத்துரை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் சண்முகராசா, சடாசிவம், குமாரவேல், இராசையா (புங்குடுதீவு), அமரர் கணபதி ஜயாத்துரை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலம் சென்ற மகாலிங்கம் (முன்னாள் உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க ஊழியர்) மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), ராஜன் (கனடா), இராஜதுரை செல்வம், மனோகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நவமணி, பாக்கிய லஷ்சுமி(கனடா), இராஜதுரை (அதிபர் யா/அல்வாய் றோ.க.பாடசாலை), மஞ்சுளா (கனடா), சூரியகலா (கனடா) ஆகியோரின் மாமனாரும் புஸ்பராசா, சியாமளா, ஜோதிவதனன், பிரமளா, சர்மளா, கோமளா, பிரபாகரன், கிருபாகரன், யசோதா, நொட்வின்- சுமதி (கனடா), உருத்திரா, சுஜிதா (கனடா), ஜீவிதா, அஸ்வினி, சஞ்சீவன் (கனடா), ஜனனி, ரமணன், இந்திரஜித், பிரியந்தன், மைதிலி, ஜனகன், சுருதிலயன், அஸ்வின், அர்வின், அகவின் ஆகியோரின் பேரனும் தாட்சாயினி, கம்சாயினி, அபிஷா, லக்ஷன், சுருதிகா, அக்சயா, அபிஷா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று 22.01.2011 காலை 9.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு வல்லை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கி.இராஜதுரை (அதிபர்)
குடும்பத்தினர்

நாவலடி,
உடுப்பிட்டி

தொ.பே:-021 2263895

(3557)

## இராசா முருகையா



கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா முருகையா 17.01.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும் வீரகத்தி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மீனாதேவியின் அன்புக்கணவரும் சுகிந்தா (டென் மார்க்), சுகிந்தன், வனிதா (நோர்வே), முகுந்தன் (ஜேர்மனி), சுரேகா (பிரித்தானியா), ஜெயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாலகுமார் (டென்மார்க்), பிறேமகாந்தன் (நோர்வே), ராதா (ஜேர்மனி), சந்திரன் (பிரித்தானியா) ஆகி யோரின் அருமை மாமனும் மயில்வாகனம், அன்னம்மா, பூமணி, இரத்தினம், நல்லம்மா ஆகியோரின் ஆசைத்தம்பியும் இராசா, இந்திராணி, ஜயாத்துரை, மங்களம், இராசலக்ஷ்மி, செல்லத்துரை, சதாசிவம், நவரத்தினம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திசானா, சவீதா, ஹரணி (டென்மார்க்), அபிஷன், தேனுஜா (நோர்வே), கனிஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.01.2011) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

தொ.பே:021 224 1006

தகவல்
குடும்பத்தினர்.

சி-1070

# தனியார் பஸ்கள் யாவும் முற்றவெளி தரிப்பிடத்திலிருந்தே புறப்படும்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள மின்சார நிலைய வீதியின் இரு ஓரங்களிலும் நிறுத்தி வடமாகாணத்திற்கு வெளியில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்துகள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ். முற்றவெளியில் அமைந் துள்ள மீன் சந்தைக்கு முன்னால் உள்ள தனியார் பஸ் நிலையத் தரிப்பிடத்தில் தரித்து நின்று மக்களை ஏற்றிச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள் ளார்.



யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த 4 ஆம்திகதி தேசிய ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (ஸ்ரீ-2)

# பேருந்துகளில் கொள்ளையிட்ட நான்கு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

தம்புள்ளை ஊடாக பயணிக்கும் தனியார் பேருந்துகளில் பணக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கோஷ்டியொன்றைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களை பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இப்பகுதி ஊடாகப் பயணிக்கும் தனியார் பேருந்துகளில் திருடுவதற்காக பிரதான சந் தேக நபருடன் 9. பேர் கொண்ட மூன்று குழுக்கள் செயற்பட்டு வருகின்ற நிலையிலேயே அவர்களில் நால்வர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி கொள்ளையர் களால் தம்புள்ளை ஊடாக பயணிக்கும் பேருந்துகளால் ஒரு மணித்தியாலத்திற்கு 3 ஆயிரத்து 200 ரூபா பணம் சேகரிக்கப்படுவதாக எதிர்பார்க்கின்றனர்.

இதனையடுத்து அவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்ட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தம்புள்ள பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து மூன்று சந்தேக நபர்களையும் அவர்களுக்கு தலைவராகச் செயற்பட்டவர் என்ற சந்தேகத்தில் மற்றொருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலானய்வு திணைக்களத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# சங்கானை மத்தி பகுதியில் குடியிருப்போருக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை

வலிகாமம் மேற்கு சங்கானை மத்தி ஜே/181 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாக வசித்துவரும் குடியிருப்பாளர்களின் வேண்டுகோளின் பேரில் அவர்களது காணிப் பிரச்சினைக் குத் தீர்வுகாணும் முக மாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு நேரடியாக விஜயம் செய்தார்.

ஏற்கனவே அக் குடியிருப்பு மக்கள் பிரதி நிதிகள் கடந்த 18 ஆம் திகதி அமைச்சரது யாழ். பணிமனைக்கு வருகை தந்து தமது கோரிக்கையினைத் தெரியப்படுத்திய நிலையில் நேற்று முன்தினம் அப்பகுதிக்கு விஜயம் செய்தார்.

இதன் போது பிரதேச செயலாளரினால் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இங்கு குடியிருப்போரில் ஏற்கனவே அனுமதிப்பத்திரம் உள்ளோர், 2006 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அங்கு குடியேறியோர், வேறு பகுதியில் சொந்த காணி உள்ளோர், சொந்தக் காணியில் வீடுகள் உள்ளோர் மற்றும் அனுமதிப் பத்திரம் இன்றி குடியிருப்போர் ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர்.

இதனடிப்படையில் ஏற்கனவே அனுமதிப் பத்திரம் உள்ளோருக்கும் 2006 ஆம் ஆண்டிற்குப் பின்னர் குடியேறியோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் காணியினைப் பகிர்ந்தளித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும் அக்குடியிருப்பாளர்களின் கோரிக்கையின் பேரில் பாதி கட்டப்பட்டுள்ள சனசமூக நிலையம் பூரணப்படுத்தப்படும் எனவும் மின்சார வசதி மற்றும் வீதி திருத்தம் என்பன கட்டம் கட்டமாக மேற் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குடியிருப்பாளர்களிடம் உறுதியளித்தார். (ஸ்ரீ)

# சட்டசபை தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக பிரசாரம் செய்வேன்

## சீமான் பேட்டி

திருப்பூரில் நாம் தமிழர் இயக்க கட்சி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் நடந்தது. கட்சித்தலைவர் சீமான் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நிர்வாகிகளை அறிமுகம் செய்தார். பின்னர் சீமான் நிருபர்களிடம் கூறியதாவது,

எங்கள் இயக்கம் தமிழர்களுக்காக போராடி வருகிறது. நாம் தமிழர் இயக்கத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது.

எதிர்வரும் தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடமாட்டோம். தமிழக சட்டசபை தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக பிரசாரம் செய்வேன். காங்கிரஸ் கட்சி தான் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு வகைகளில் இன்னல்களுக்கு காரணமாக இருந்து வருகிறது.

இதுவரை 537 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினையின் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுக்காமல் மௌனம் சாதித்து வருகிறது. மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் இலஞ்சம், ஊழல் தலைவிரித்தாடுகிறது. இதனால் தான் காங்கிரசுக்கு



எதிராக பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளோம். காங்கிரசுக்கு எதிராக பிரசாரம் என்பது எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான பிரசாரம் அல்ல. எங்களுடைய பிரசாரத்தால் மற்ற கட்சிகள் பயனடைந்தால் நாங்கள் அதற்கு பொறுப்பல்ல என்று தெரிவித்தார். (ஸ்ரீ)



யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண் காட்சி நேற்று யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக ஆரம்பமானது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா நாடாவெட்டி கண்காட்சியைத் திறந்துவைப்பதையும் விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

(கொழும்பு)

**சமுத்திர பல்கலைக்கழகம்**

தேசிய மீன்பிடி மற்றும் கடற்சார் பொறியியல் நிறுவனத்தை ஸ்ரீலங்கா சமுத்திர பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் டளஸ் அழகப் பெருமவின் ஆலோசனைக்கு இணங்க இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

**பொலநறுவை வைத்தியசாலை**

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு ஏற்ப பொலநறுவை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவை 19.67 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்க அமைச்சரவை இணக்கம் கண்டுள்ளது.

**அளவியல் மற்றும் ஆய்வுப் படகு**

மீன்பிடி மற்றும் நீர் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பிரேரணைக்கு அமைய நாரா நிறுவனத்துக்கு தாய்வானில் இருந்து 313.84 மில்லியன் ரூபா பெறுமதியான அளவியல் மற்றும் ஆய்வுப்படகொன்றை வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

**வெள்ள நிவாரண உதவி**

இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர முன்வைத்த கருத்துக்கு ஏற்ப வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரண உதவி வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கு முன் வருமான அடிப்படையிலேயே நிவாரண உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கடற்பன்றிகளை பிடித்த மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(கொழும்பு)

கடற்பன்றி எனப்படும் அரிய வகை மீன்கள் இரண்டை பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 2 மீனவர்களையும் தொடர்ந்து எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி கே. ஜீவராணி நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மன்னார் வங்காலைப்பாடு கடலில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தங்களின் வலைகளில் மாட்டி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட இராட்சத கடற்பன்றிகள் இரண்டினை கரைக்கு கொண்டு வந்தனர்.

அதன்பின் குறித்த மீனவர்கள் இருவர் மன்னார் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# அரிசி விலையை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல இதனை தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின்போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலப்பகுதியில் பாரிய அளவில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் அதன் விலையை கட்டுப்படுத்த முடியாது போகும் எனவும் இந்த நிலையில் மேலதிகமாக அரிசி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தால் அவற்றை அரசாங்கம் உடனடியாக சந்தைக்கு நிரம்பல் செய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# தலதா மாளிகையில் மரம் வெட்டிய பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஸ்ரீதலதா மாளிகையின் மரம் ஒன்றை வெட்டியதாகக் கூறப்படும் பொலிஸ் அதிகாரி ஒருவரை எதிர்வரும் மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி கண்டி மேலதிக நீதவான் ரவீந்திர பிரேமரத்ன உத்தரவிட்டுள்ளார்.

கண்டிதலதா மாளிகைக்குச் சொந்தமான காணியில் உள்ள மரம் ஒன்றை வெட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பேராதனைப் பொலிஸார் செய்து கொண்ட முறைப்பாட்டை அடுத்து மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் அக்காணியின் பாதுகாப்புடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரியான சேனக ஜகத்குமார என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்படமாட்டாது

## ஐ.நா.அறிவிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், நிபுணர்கள் குழு விசாரணை நடத்தாது என ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பி ட்டுள்ளது.

இன்னர் சிற்றி பிரஸ் ஊடாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கவில்லை என ஐக்கிய நாடுகள் பேச்சாளார் மார்டின் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு உறுப்பினர்களையோ அல்லது வேறு தரப்பினரையோ ஜனாதிபதி சந்திக்கமாட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பவேண்டுமென சில மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் இலங்கை விஜயம் தொடர்பான திகதிகள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

JAN 2011 TO JUN 2011

20

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011


# நல்லிணக்க ஆணைக்குழுவில் அமைச்சர்கள் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள சர்வதேச கற்கைநெறிகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவின் அமர்வில் அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, ராஜித சேனாரட்ன மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஆகியோர் சாட்சியமளிக்கவுள் ளதாக ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் அமைச்சர்களான பீலிக்ஸ் பெரேரா, ராஜித சேனாரட்ன ஆகியோர் 27 ஆம் திகதி சாட்சியமளிக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்றுவரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் அரசியல்வாதிகள், அரச உயரதிகாரிகள், முன்னாள் அரச அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள்உள்ளிட்டபலர்சாட்சியமளித்து வருகின்றனர்.

மேலும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய வெளி மாவட்டங்களிலும் நடைபெற்றுள்ளன. விரைவில் அனுராதபுரம் மாவட்டத்திலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது . (ஸ்ரீ-2)

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### நோய்க்காரணி -ஒரு பூஞ்சணம்

பனாமா வாடல் நோயை ஏற்படுத்தும் பூஞ்சணத்தை பியூசேரியம் ஒக்சிஸ்போரம் (Fusarium oxysporum) என அழைப்பர். இது மண்ணில் அழுகல் வளரியாக வருளம் பூஞ்சணம். இதனது வாழ்க்கை வட்டத்தில் முழுவதுமாக இலிங்கமில் இனப்பெருக்கமே காணப்படும்.

இலிங்கமில் வித்திகளை விரைந்துருவாக்கும் இப் பூஞ்சணம் வாய்ப்புக் கிடைக்கும்போது அதனைப் பயன்படுத்தி வாழையினுள் உட்புகுந்து விடும். இவ்வாறாக வாழையினுள் உட்செல்லலுக்கு வாழைக்கிழங்கில் அதன் போலித்தண்டில் ஏற்படும் சேதம் உதவியாக அமைந்துவிடும்.


இப்போது அனுமானிக்க முடிகிறதா என்னினிய உறவுகளே! வாழையில் ஏற்படும் சேதத்திற்கு நாமும் ஒரு காரணம். வாழையடியிலிருந்து வாழைக்குட்டியைப் பிரித்தெடுக்கும்போதும், வாழையடியில் பயிர்ச்செய்கை பண்படுத்தலின் போதும் அதனது வேர்கள் மற்றும் கிழங்கு என்பன பாதிப்புறுவதும் மேற்கூறிய காரணமாகும்.

இன்னொரு காரணமாக விலாங்குப்புழு மற்றும் வாழைத்தண்டு, வாழைக்கிழங்கு நீள்மூஞ்சி வண்டு என்பனவற்றின் சேதம் அமைந்துவிடுகிறது. விலாங்குப்புழுவினதும் நீள்மூஞ்சி வண்டுகளினதும் சேதம் வாழையில் பரவலாக இருப்பது இவ்வாடல் பூஞ்சணத்தின் தொற்றுதலை விரைந்து செய்ய உதவியாயிருக்கிறது. தீமையான செயலுக்கு இருக்கின்றன. ஒற்றுமையைப் பாருங்களேன்! ஒன்று இன்னொன்றுக்கு உதவி. இதுவே ஆக்கத்திற்காகஇருந்தால் எவ்வளவு சிறப்பாகவிருக்கும்.


Fusarium wilt of Banana

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

*நீள்மூஞ்சி வண்டுகளும், விலாங்குப் புழுவும் பியூசேரியம் பூஞ்சணத்துடன் கொண்ட நல்லுறவு நட்புறவாகி அவர்களுக்கிடையில் நன்மையையும் அவற்றினது வளர்ச்சிக்கு உதவினாலும் வாழைக்கோ வாழைச்செய்கையாளர்களுக்கு அதனால் தீங்கோ தவிர நன்மையென்று ஏதுமில்லை. இந்த தீங்கு விளைவிக்கும் நட்பினை துண்டிப்பதில் நாங்கள் வெற்றியடைய முடியுமானால் அதுவே இப் பீடை களை முகாமைத்துவப்படுத்திய தற்கான வெற்றியாகும்.*


Fusarium oxysporum

வாருங்கள் என்னினிய உறவு களே!

இ' ற்கையின் படைப்பில் இப்' டியுமொரு விசித்திரம். தீமை செய்யும் காரணிகள் எப்போதும் நன்மை செய்பவைகளை விட வீரியமாயிருக்கின்றன. இதனாலேயே சேதத்தை விரைந்து கட்டுப் படுத்த முடியவில்லை. 13-VIII

### பியூசேரியம் பூஞ்சணம்

மண்ணினுள்ளேயுள்ள தாவர மீதிகளையும் பாகங்களையும் உக்கவைத்து பிரித்தழிய வைப்பதில் அழுகல் வளரிப் பூஞ்சணங்களுக்கு பெரும் பொறுப்பு உண்டு. அந்த வகையில் பியூசேரியம் எனும் வகைப்பூஞ்சணம் மண்ணில் வாழும் அழுகல் வளரிப் பூஞ்சணமாகும். அழுகல் வளரியாக வாழ்ந்தாலும் எம்மவருள் ஒருசில புத்திமான்களைப் போல இடங்கிடைத்தால் மடங் கட்டி விடும் திறமை இதற்குமுண்டு. அதனால் தானே தன்பாடு என மண்ணில் அழுகல் வளரியாக இருக்கும் பியூசேரியத்திற்கு உயிர் கொடுத்து தம்மையறியாது காவிச் சென்று வாழையினுள் சேர்த்துவிடும் செயலை விலாங்குப்புழுவும் வாழை நீள்மூஞ்சி வண்டுகளும் செய்கின்றன. மண்ணினுள் இருப்பதனால் பியூசேரியம் பூஞ்சணத்திற்கு இப்படியொரு வசதி.

செல்லும் எதிலும் தொற்றிக்கொள்ளும் ஓசி பயணம் செய்யும் எங்களூர் இளசுகளைப் போல பியூசேரியமும் விலாங்குப் புழு மற்றும் நீள்மூஞ்சி வண்டுகளின் உடலில் தொற்றி வாழையினுள் உட்சென்று விடுகின்றது.


விஞ்ஞானத்தின் பக்கத்தில் இச் செயலை, ஒன்றில் இன்னொன்று புறத்தே காவப்பட்டுச்செல்வதனை Phoresy எனஅழைக்கின்றார்கள்.

(தொடரும்)

# நாய் இனத்தை அச்சுறுத்தும் டிஸ்ரெம்பர் (Distemper)

இன்று நாய்களின் உயிர்களைக் காவு கொள்ளும் ஒரு தொற்று நோயாக டிஸ்ரெம்பர் நோய் (Distemper) விளங்குகின்றது. இப்பொழுது இது யாழ்ப்பாணத்தில் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இந்நோயானது உயர் ரக நாய்களை மட்டுமன்றி உள்ளூர் நாய்களையும் (Local breeds) தாக்கும் தன்மை கொண்டது.

இந்நோயானது உள்ளூர் நாய்களைத் தாக்குவதில்லை என்ற தவறான அபிப்பிராயத்தினால் மக்கள் இவற்றுக்குரிய தடுப்பூசிகளை ஒவ்வொரு ஆண்டும் நாய்களுக்கு வழங்குவதில் அக்கறை காட்டுவதில்லை. தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நாய்கள் இந்நோய்க்குரிய எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பதனால் இது பெரும்பாலும் அவற்றைப் பாதிப்பதில்லை என்றே கூறலாம்.




### நோய்க் காரணி

இந்நோயானது ஒரு வகை RNA வைரசினாலே ஏற்படுத்தப்படுகின்றது. இவ் வைரசானது Paramyxo Virus family ஐச் சேர்ந்தது.

### நோய்த் தொற்றல்

இவ் வைரசானது நோயேற்பட்ட ஒரு நாயிலிருந்து இன்னொரு நாய்க்குத் தொற்றும் ஆற்றலுள்ளது. காற்றினாலும் நோயேற்பட்ட நாயினது மூக்கு, கண் என்பவற்றின் சுரப்புகள், மலம், சிறுநீர் ஆகியவற்றை நோயற்ற நாய் தொடுவதாலும் நோயேற்பட்ட நாயினால் அழுக்காக்கப்பட்ட உணவு, நீர் என்பவற்றை உட் கொள்வதனாலும் ஒன்றிலிருந்து இன் னொன்றிற்குத் தொற்றுகின்றது. இந்நோயானது மனிதருக்குத் தொற்றுவதாக இது வரை அறியப்படவில்லை.

### நோயரும்பு காலம் (Incubation Period)

இந்நோயானது தொற்றியதிலிருந்து அதற்குரிய குணங்குறிகளைக் காட்டுவதற்கு 14-18 நாட்கள் எடுக்கின்றன.

### நோய்த் தாக்கம்

இவ்வைரசானது முதலிலே சுவாசத்தொகுதியிலுள்ள நிணநீர்க் கலங்களைச் சென்றடைந்து அங்கு பல்கிப் பெருகுகின்றது.

இதன் பின்னர் குருதிச் சுற்றோட்டத்தினுள் உட்சென்று படிப்படியாக சமிபாட்டுத்தொகுதி இனப்பெருக்க, சிறுநீர்த் தொகுதிகளையும், நரம்புத் தொகுதியையும் குறிப்பாக பார்வை நரம்புகளையும் தாக்குகின்றது.

நிணநீர்க் கலங்களைத் தாக்கி நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைப்பதனால் இவ் வைரசின் தொற்றலுக்கு உட்பட்ட விலங்கானது இலகுவில் ஏனைய இரண்டாந்தர நுண்ணுயிர்களின் (Secondary infection) தொற்றலுக்கு உள்ளாகின்றது.

### குணங்குறிகள்

இந்நோய் ஏற்பட்ட நாயானது பசியின்மை, மூக்கு, கண் போன்றவற்றிலிருந்து சுரப்புக்கள் (Mucopurulent discharges) வெளியேறுதல், சில நேரங்களில் காய்ச்சல் போன்ற அறிகுறிகளையும் ஏனைய தொகுதிகளைப் பாதிப்பதன் மூலம் வாந்தி, வயிற்றோட்டம், நீரிழப்பு, அளவுக்கதிகமான உமிழ்நீர்ச்சுரப்பு (வாயினால் நுரைவெளியேறுதல்) இருமல், சுவாசிப்பதில் சிக்கல், சடுதியான நிறைக்குறைவு ஆகியவற்றையும் ஏற்படுத்துகின்றது.


மேலும் இவ் வைரசானது நரம்புத் தொகுதியைப் பாதிப்பதன் மூலம் வலிப்பு, நடக்கும் பொழுது பின்பக்கம் (Back Side) தள்ளாட்டம், பின் கால்கள் இயக்கமின்மை (Paralysis), போன்ற அறிகுறிகளைக் காட்டுவதுடன் நாயினது மூக்கு கால்களின் சவ்வு (Foot pad)என்பனவும் தடிப்படைகின்றன.

எனவே நோயேற்பட்ட நாயை உடனடியாக அருகிலுள்ள அரச கால்நடை வைத்தியரிடமோ அல்லது தகுதிபெற்ற தனியார் கால்நடை வைத்தியசாலையிலோ காட்டுவதன் மூலமும் நோயேற்பட்ட நாயை நோயிலிருந்து முற்றாகக் குணமடையும் வரை தனிமைப்படுத்தி வைத்திருப்பதன் மூலமும் நோயேற்பட்ட நாயினதும் வசிப்பிடத்தை தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி தொற்று நீக்குவதன் மூலமும் மற்றைய நாய்களுக்கு பரவுவதை இயன்றளவு தடுக்க முடியும்.

### நோய்த் தடுப்பு

நோய் வந்தபின் காப்பதைவிட நோய் வருமுன் காப்பதே சிறந்தது. நோய் வருவதற்கு முன்பே உரிய தடுப்பூசிகளை (DHL) வழங்குவதன் மூலம் வளர்ப்பு நாய்களை காப்பாற்றிக்கொள்ளமுடியும்.

முதலாவது தடுப்பூசி நாயினது வயது




எட்டு வாரங்களாக இருக்கும் பொழுதும், இரண்டாவது தடுப்பூசியானது நாயினது வயது 14 வாரங்களாக இருக்கும் பொழுதும் , பின்னர் இரண்டாது தடுப்பூசி வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். (தடுப்பூசி வழங்கும் கால அட்டவணை இடத்திற்கிடம் மாறுபட்ட பொழுதும் இதுவே பொதுவான கால அட்டவணையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது). இந்நோய்க்கு வழங்கப்படும் தடுப்பூசியானது டிஸ்ரெம்பர் நோயை மட்டுமன்றி நாய்களில் ஏற்படும் ஈரலழற்சி (Hepatitis), எலிக்காய்ச்சல் (Leptospirosis) போன்ற நோய்களையும் தடுக்கும் வல்மை கொண்டது.

Dr.க.அகல்யா
கால்நடை வைத்தியர் (Reg.No 1667),
றோயல் கால்நடை வைத்திய நிலையம்,
திருநெல்வேலி.

Dr.யூலியானா பிரான்சிஸ்
அரச கால்நடை வைத்தியர் (Reg.No 935),
பருத்தித்துறை.

# தை மாத இராசி பலன்கள்




(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

***உதவிக்கரம் நீட்டுவதில் முதல் ஆளாக நிற்கும் தனுசு இராசி நேயர்களே!***

நீங்கள் எண்ணங்களை எளிதில் செயற்படுத்துபவர்கள். குடும்பத்தினரின் குறைகளை அப்போதைக்கு அப்போது நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்வீர்கள். சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் பேசி, காரியங்களைச் சாதித்து கொள்வீர்கள். இப்படித்தான் நடக்கும் என்பதை ஊகிக்கக் கூடியவர்களும் நீங்கள் தான்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பாக்கும் பொழுது, குருவின் ஆதிக்கம் வலுவாக இருப்பதால், ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் அதிகரிக்கும். பெரும், புகழும், பெருமையும் கூடும். பிரச்சினைகள் ஒவ்வொன்றாக அகலும். ஒன்பதுக்கு அதிபதி சூரியனுடன், பத்துக்கு அதிபதி புதன் மாதத்தின் மையப்பகுதியில் கூடி தர்மகர்மாதிபதி யோகத்தையும், புத- ஆதித்ய யோகத்தையும் உருவாக்கப் போவதால், புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

எதிரிகள் கொடுத்த இடையூறு அகலும். உதிரி வருமானங்களும், உங்களுக்கு தொழிலால் வரும் வருமானங்களும் இணைந்து கிடைக்கும் மாதமாக இம்மாதம் அமையப் போகிறது.

எனவே நினைத்த காரியத்தை, நினைத்த நேரத்தில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். குருப் பெயர்ச்சியான பின்னர் இன்னும் சில மாதங்களில் இனிய பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். அதுவரை கொஞ்சம் பொறுமையைக் கடைபிடிப்பது நல்லது. குரு வழிபாடும், பௌர்ணமி கிரிவல வழிபாடும் தொடர்ந்து செய்து வந்தால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் இல்லத்தில் அரங்கேறும்.

இம்மாதம் 26 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழில் எதிர்பார்த்தபடி திருப்திகரமாக நடைபெறும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேரும் வாய்ப்பு கிட்டும்.

குடும்ப நலன் கருதி முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். வசதி, வாய்ப்புகள் பெருகும். இந்த நேரத்தில் அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிபாரத்துவ யோகமும், பதவி வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரும் வாய்ப்பு உண்டு.

6, 11 க்கு அதிபதியான சுக்ரன் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது. நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் எடுத்துக் கொள்வீர்கள். எதிரிகள் விலகுவர். அந்நியதேசப் பயணம் முதல் அடுத்த ஊர் பயணம் வரை எண்ணியபடியே நிறைவேறும். பெப்ரவரி 12 ஆம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7, 10 க்கு அதிபதியான புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, களத்திர வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளுக்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். வக்ர சனியின் இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. உறவினர் பகை உருவாகலாம். எனவே, விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே வெற்றிக்கான வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் யோகங்கள் வந்து சேரும் மாதமாக அமையப் போகிறது. குடும்ப ஒற்றுமை கூடும். குறை சொல்லியவர்கள் உங்களைத் தேடி வருவர். தொழில் மற்றும் உத்தியோகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எடுத்த முயற்சி கைகூடும். உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்போடு, வீடு வாங்கும் முயற்சியில் அனுகூலம் ஏற்படும். ஜென்ம இராகு உடன் பிறப்புகள் வழியில் பகையை உருவாக்கலாம். எனவே, சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சந்தோஷங்களை வரவழைத்துக் கொள்ளலாம். கணவன்- மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும்.




(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)

***மற்றவர்கள் போற்றும் அளவிற்கு மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்று விரும்பும் மகர இராசி நேயர்களே!***

நீங்கள் சிரித்த முகத்திற்கு சொந்தக்காரர்கள். சிந்தனை ஆற்றல் உங்களுக்கு நன்றாகவே இருக்கும். சந்தித்தவர்களோடு ஆனந்தமாகப் பேசுவதில் ஆர்வம் கொள்வீர்கள். பொறுப்பு உணர்ச்சி உங்களுக்கு அதிகமாகவே உண்டு. கோபத்திற்கு ஆளாகும் பொழுது, உங்களை சமாதானப்படுத்துவது என்பது இயலாத காரியமாகும்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பாாக்கும் பொழுது, மாதத் தொடக்கம் உங்களுக்கு மகிழ்ச்சியாகவே இருக்கும். பரபரப்பாக காணப்படுவீர்கள். இடையில் ஏற்படும் கிரக மாற்றத்தால் இனிய பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். ஆயினும், மாதக் கடைசியில் சனி வக்ரம் அடைகிறார். எனவே உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

தனாதிபதியாகவும் சனி விளங்குவதால், பணப்புழக்கத்திலும் கவனம் தேவை. இனத்தார் பகை மாறவும், எதிர்ப்புகள் குறையவும், பணத்தேவைகள் ஏற்படும் பொழுதெல்லாம் பக்கபலமாக இருப்பவர்கள் கொடுத்து உதவி செய்யவும் சனீஸ்வர பகவானை வழிபட்டு வருவது நல்லது. தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் சனீஸ்வர பகவானை ஒருமுறை யேனும் தியானியுங்கள். சனிக்கிழமை விரதமும் எள் தீபம் ஏற்றுதலும் உகந்தது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மாதமாக இம்மாதம் உங்களுக்கு அமையப் போகிறது.

இம்மாதம் 26 ஆம் திகதி மகர ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இது உங்களுக்கு சில எதிர்பார்ப்புகளை நடத்தி வைக்கும். குறிப்பாக, 6,9 க்கு அதிபதியாக புதன் விளங்குவதால், கடன் சுமையைக் குறைக்கும். எதிரிகள் உதிரிகளாவர். ஈடுபட்டிருக்கும் துறையில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். வளர்ச்சி ஏற்படும் இந்த நேரத்தில் தந்தை வழியில் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். அனுசரித்துச் செல்வது ஆதாயத்தைத் தரும். பூர்வீக சொத்துக்களை விற்கும் போதும், புதிய சொத்துக்களை வாங்கும் பொழுதும், கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

உங்கள் இராசிக்கு 5,10 க்கு அதிபதியான சுக்ரன் 12 ஆம் இடத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, சுயதொழில் நடத்துவோர், புதிய கிளைத்தொழில் தொடங்க அல்லது மாற்றுத் தொழில் வைக்க சிந்திக்கும் நேரமாக அமையப்போகிறது. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படலாம். குறிப்பாக, குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய நேரம் இது. உங்கள் மேற்பார்வையில் குழந்தைகளைப் பேணி வைத்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

கும்பத்தில் பெப்ரவரி 12 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பயணங்கள் அதிகரிக்கலாம். வாகனப் பழுதுகளும் ஏற்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சனியின் வக்ர இயக்கத்தால் சஞ்சலங்கள் உருவாகலாம். மணியான வாழ்க்கை மலர சிவாலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பது நல்லது. வரவும், செலவும் சுகமாகும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் சுப்தமாதிபதி நான்கில் சஞ்சரிப்பதால், குடும்பச் செலவுகள் கூடும். கொடுக்கல் – வாங்கல்களில் நிதானம் தேவை. கணவன்-மனைவிக்குள் உறவு திருப்திகரமாக இருக்கும். ஆயினும், ஆரோக்கியத்திற்காக ஒரு சிறு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு அதிகாரிகளின் அனுசரிப்பும், ஆதரவும் கிடைக்கும். அடகுவைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். அங்காரக வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும். (தொடரும்)

**சிவல்புரி சிங்காரம்**

# முகாம்களில் எஞ்சியுள்ளோர் ஏப்ரல் மாத இறுதிக்குள் மீள்குடியேற்றப்படுவர்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா நலன்புரி முகாம்களில் எஞ்சியுள்ள சுமார் 20 ஆயிரம் பேரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குள் மீள்குடியேற்றவே முயற்சிக்கின்றோம். நிலக்கண்ணிவெடிகளே மீள்குடியேற்றத்துக்கு தடையாக அமைந்துள்ள பிரதான காரணியாகும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் பணிகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது , இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த அதிகமான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுவிட்டனர். தற்போதைய நிலைமையில் சுமார் 20 ஆயிரம் பேரே எஞ்சியுள்ளனர்.

இந்நிலையில் முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குள் மீள்குடியேற்றிவிடவே முயற்சிக்கின்றோம். இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீள்குடியேற்ற வேண்டும் என்பதே எமது ஆர்வமாகும்.

ஆனால் நிலக்கண்ணி வெடிகளே இந்த செயற்பாட்டில் பிரதான தடையாகவுள்ளது. இவைகள் அகற்றப்பட்டு விட்டதாக பிரதேச செயலகம் எங்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் சான்றிதழ் பெறப்படவேண்டியதும் அவசியமாகும்.

அதன் பின்னரே குறிப்பிட்ட பிரதேசங்களில் மக்களை குடியேற்ற முடியும். எனவே நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படும் வரையே நாங்கள் காத்திருக்கின்றோம். இதேவேளை மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான வசதிகளை முடியுமான வரை நிறைவேற்றி வருகின்றோம்.

கடந்த டிசம்பர் மாதம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். அமைச்சுக்கு இதுவரை 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# அரசாங்க விழாக்களுக்கு தடை

(கொழும்பு)

அரசாங்கத்தின் நிதியை கொண்டு நடத்தப்படுகின்ற விழாக்களுக்கு தேர்தல்கள் செயலகம் தற்காலிகமாக தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் சுற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ள தேர்தல்கள் ஆணையாளர், திறப்பு விழாக்கள், நடமாடும் சேவைகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை அரசாங்க நிதியை கொண்டு மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

இது குறித்து அனைத்து அரசாங்க திணைக்களங்கள், சபைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு அல்லது விலக்குவதற்கு இவ்வாறு அரசாங்கத்தின் நிதியை அல்லது வளத்தை பயன்படுத்தக் கூடாது என கட்சிகளை அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)



*தாளையடி றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் தரம்1 மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் அதிபர் நா. கண்ணதாசன் உரையாற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஸ்ரானிஸ்லாஸ், சிறப்பு விருந்தினரான தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ஜேம்ஸ்நாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.*

# கொழும்புப் பல்கலைக்கழக கல்வித்துறை

# பேராசிரியர் கலாநிதி கருணாநிதி அ

## அருளாசிச் செய்தி



பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பேராசிரியர் பட்டம் பெற்றமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அல்வாய் சாம ணந்தறை பிரதேசம் பல செயற்பாடுக ளைக் கொண்ட ஊராகும். இங்கு முதலாவது பேராசிரியரைக் கண் டமை ஊருக்கும், ஊரில் உள்ள மக்களுக் கும் மிகப்பெருமையை ஏற்படுத்தியுள்ளது. கல்விநிலை யில் உயர்நிலை அடைகின்ற செய்தி பேராசிரியர் நிலை யாகும்.

இதனாலேயே கல்வி அறிவில்லாதவர் வாழ்க்கை இருட் டறையில் நிற்பது போன்றது. இக்கல்விப்பணியை சிறப்பாகச் செய்த கருணாநிதியை கொழும்புப் பல்கலைக்கழகம் பேராசிரியராக நியமனம் செய்திருப்பது கல்விச் சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். இக்கௌரவத்தைச் செய்த பல்கலைக்கழகத்தினை பாராட்டி வாழ்த்துகின்றோம். கருணாநிதி பல பட்டங்களைப் பெற்று கல்விக்கும், சமுதாயத்திற்கும் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இப்பட்டம் பெற்றமையை கௌரவித்து சிறப்பிக்கும் ஊர்மக்களையும், அல்வாய் சாமணந்தறை பிள்ளையார் கோவிலைச் சார்ந்தவர்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**

## உழைப்பிற்கு உகந்த உயர்வு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியற் பீடத்தில் பேராசிரியராக திரு.மார்க்கண்டு கருணாநிதிக்குக் கிடைத்த உயர்வு அவரது அர்ப்பணித்த உழைப்புக்கு உகந்த பெறுபேறாகும். பள்ளிக்கூட மட்டத்தில் ஆசிரியராகத் தொடங்கிய அவர் பயணம் பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியர் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

ஓர் ஆசிரியனுக்கு இருக்கவேண்டிய பண்புகள், தகைமைகள் அனைத்தும் முழுமைபெற்ற தொகுப்பின் உருவமே கருணாநிதியின் செயற்பாடுகளும் விளைவுகளும் எனலாம். அறிவைத் தேடுவதிலும் வளர்ப்பதிலும் அவர்காட்டிய ஈடுபாடு அவரை இந்த ஸ்தானத்துக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. தான் தேர்ந்தெடுத்த துறையில் தமது புலமையினைப் பெருக்கியதன் பலனாக கல்வியியலில் முதுதத்துவமாணி, கலாநிதி பட்டங்களைப் பெற்றுள்ளார். ஆய்வு அரங்குகள், செயலமர்வுகள், பட்டறைகள் ஆகியவற்றில் பங்கெடுப்பதன் மூலம் தனது புலமையினை பிறரோடும் பகிர்ந்து கொள்ளும் பாங்கினை வளர்த்துள்ளார். அதன் பெருமையினைக் கல்வி உலகம் அனுபவிக்கிறது.

பேராசிரியர் கருணாநிதியின் தொடர்பாடல் திறன்களும் போக்குகளும் சமூகத்தின் நெருங்கிய உறவினை வளர்த்துள்ளது. தன்னை நாடிவருவோருக்கு இலகுவில் அணுகக்கூடியவராக இருப்பது அவரது இயல்புகளின் அடித்தளமாகும். இது மாணவர்கள் அவரை நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புக்களை வழங்குகின்றது. ஆய்வுச் செயற்பாடுகளில் முக்கிய அம்சங்களில் ஒன்றான இத்தகைய உறவு நற்பயனை நல்கும் ஒன்றாகும். வேறுபட்ட கருத்துக்களுக்கும் இடங்கொடுத்து இசைந்து செயற்படக்கூடிய சூழலை உருவாக்க இது அவசியமாகும்.

இவையெல்லாம் பொருந்திய மொத்த உருவமாகக் கல்வியியல் இலக்கணங்களின் பிரதிபலிப்பாக அவரைக் காண்கிறோம். அவருடைய சேவை செழித்துப் பெருக நிறைந்த மனத்துடன் வாழ்த்துகிறேன்.

**வாழ்நாள் பேராசிரியர்**
**வ.ஆறுமுகம்**

## துணைவேந்தரின் வாழ்த்து



சமூக மேம்பாட்டில் கல்வியின் இடம் இன்றியமையாதது, கல்வியின் சமூகவியல் (Sociology of Education) சார்ந்த ஆய்வுகளும் அவற்றினை எமதாக்கும் கல்வியியலாளர்களும் போற்றுதற்குரியவர்.

இந்தவகையில் கொழும்புப் பல்கலைகழகத்தின் கல்வியியல் துறையில் தன் கற்பித்தல் வாண்மையினாலும் ஆய்வுத்திறத் தாலும் உயர்ந்த பேராசிரியர் மா.கருணாநிதி அவர்களைக்கௌரவிக்கும் இவ்வேளைபெறுமதியானது.

சமூக நேசிப்புடன் சமூகப்பயனான ஆய்வு அனுபவங்களை தருகின்ற பேராசிரியரின் பணி எங்கள் கல்விப்புலத்திற்கு வெளிச்சம் தருவது.

அவரது வாழ்வும் கல்விப்பணியும் மென்மேலும் அறிவார்ந்த வல்லமைகளை சமூகத்துக்காக்கிடவும் அவ்வாக்கங்களின் வழி பேராசிரியர் புகழ் நிலைபெறவும் எல்லையிலாத என் அன்பு வாழ்த்துகள்.

**பேராசிரியர் நா.சண்முகலிங்கன்**
**துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.**

## வாழ்த்துரை



பேராசிரியர் மா.கருணாநிதி அவர்கள் ஆழ்ந்த அறிவு', அதேவேளை தற்பெருமை கொள்ளாத அ க்கமுடைமையினதும் வடிவமானவர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்பீடத்தைத் தமது புலமைவலிமையால் அலங்கரித்து நிற்பவர். "நெரக்" ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராகப் பணிபுரிந்து, பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்குரிய பயனுள்ள ஆய்வு அறிக்கைகளைத் தந்து கொண்டிருப்பவர்.

கல்வியியலை வளம்படுத்தும் புலமைச் செறிவுமிக்க தமிழ்நூல்களையும் ஆங்கிலநூல்களையும் தந்து கொண்டிருப்பவர்.

உலக ஆய்வு மாநாடுகளிலே பங்குகொண்டு தனித்துவம் மிக்க ஆய்வுகளைச் சமர்ப்பித்து வருபவர். அவர்களுக்கு அளிக்கப்படும் வாழ்த்தும், வரவேற்பும் மகிழ்ச்சியையும் ஓங்கிய உவகையையும் ஏற்படுத்துகின்றன. தமிழர்களது கல்வியியல் தரத்தை மேம்படுத்துவதற்குரிய முன்னோடி நடவடிக்கையாகக் கல்வியியல் விரிவுரையாளர்களை ஒன்றிணைத்து ஒரு புலமை அமைப்பை ஏற்படுத்தும் முயற்சிக்கு இவர் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை மேலும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

பேராசிரியர் மா.கருணாநிதி அவர்கள் வளமுடன் வாழவும் கல்வித் தொண்டுகளைத் தொடரவும் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**முன்னாள் பேராசிரியர், சபா.ஜெயராசா**

## வாழ்த்துச்செய்தி

கலாநிதி மா.கருணாநிதி முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தவர். இன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறைப் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். பாடசாலை ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து இன்று பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்துள்ள கருணாநிதி அவர்கள் கடும் உழைப்புடையயவர் முழுத் தமிழ்ச் சமூகத்தினதும் பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரியவர். சிறந்த பல்கலைக் கழக ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த கல்வியியல் ஆய்வாளராகவும் மிளிர்ந்து வருகிறார் பேராசிரியர் அவர்கள். அவருடைய ஆராய்ச்சித் துறைச் சாதனைகளும், எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் கல்வியியல் நூல்களும் பல்கலைக் கழகத்தின் நிறுவன மேம் பாட்டுக்கு இவர் வழங்கிய பங்களிப்புகளும் பதவியுயர்வு பெறுவதற்குப் பிரதானமாக உதவிய காரணிகளாகும். சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதோடு ஏராளமான ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஆராய்ச்சித்துறை வழிகாட்டியாகவும் விளங்குகின்றவர்.

ஆராய்ச்சி முறையியலை பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் துறைபோகக் கற்றவர் என்பதால் இலங்கையில் ஒரேயொரு கல்வியியல் ஆய்வு நிறுவனமான தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தின் (NEREC) பணிப்பாளராகவும் பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது சிறப்புக்கு ஒரு உதாரணம் உலகவங்கி, யுனிசெப், GTZ போன்ற சர்வதேச நிறுவனங்கள் அவரை அங்கீகரித்துள்ளமையாகும். உலகவங்கி, தேவைகளுக்கெல்லாம் தொடர்புகொள்ளும் ஓர் சில கல்வி அறிஞர்களுள் பேராசிரியர் கருணாநிதியும் ஒருவராவர். மும்மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர். கல்விப்பீடத்திலுள்ள சக ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். பழகுவதற்கு எளிமையானவர். கடமையைக் கண்ணாகக் கருதுபவர். இவர் கல்வியியல் துறையில் மேலும் பல முன்னேற்றங்களைக் காணவேண்டும் என்பதே எமது பேரவாவாகும்.

**சோ.சந்திரசேகரன்**
**முன்னாள் பேராசிரியர், கல்வியியல் பீடாதிபதி,**
**கொழும்புப் பல்கலைக்கழகம்.**




## பேராசிரியர் மார்க்கண்டு கரு
## வளர்ச்சிப் ப

- கல்வியியற் பேராசிரியர்–கொழும்
- பணிப்பாளர், தேசிய கல்வி ஆராச்
- புதிய கல்விச் சட்ட உருவாக்கத்துக
- வருகை விரிவுரையாளர்– திறந்த ல் யாழ்ப்ப
- அதிபர், புனித திருத்துவக்கல்லூரி,
- ஆசிரியர், புனித திருத்துவக் கல்லூ
- விரிவுரையாளர், புவியியற்றுறை,

**கல்வித்தகைமை**

- கலைமாணிச் சிறப்புப் பட்டம் (புவியி
- முதுகலைமாணிப்பட்டம் (கல்வி), ய
- கலாநிதிப் பட்டம் (கல்வி), கொழும்பு


## உள்ளத்தனை




வடமராட்சியில் பு
மகாவித்தியாலயத்தில்
குக் கிடைத்தது. இன்
திரு.க.சிவசிதம்பரம்
கான வளங்களையும்
கியது. அங்கு புவியிய
உயர்தர வகுப்பில் பா
கள் அன்புடன் வரவே
என்ற குறிக்கோளுட
காணப்பட்டனர். அவ
கருணாநிதி பல்க
பயின்று புவியியலில் சிறப்புப்பட்டம் பெற்றார். பி
பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டமும் முதுகல்வி
அதிபரானார். அதிபர் விரிவுரையாளரானார். வி
பெற்றமைகண்டு எம் உள்ளம் பேருவகை கொ

**வெள்ளத்து அனை**
**உள்ளத்து அ**
**ஓய்வுபெற்ற ஆசிரியை, திருமதி**

# றைப் பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற அவர்களின் கௌரவிப்புச் சிறப்புமலர்



## வாழ்த்துச்செய்தி



எனது மாணவனும் கொழும்பு பல்கலைக் கழக கல்வியியல்பீட விரிவுரையாளரும் கலாநிதி.மார்க்கண்டு கருணாநிதி அவர்கள் கல்வியியலில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு நடைபெறும் கௌரவிப்பு விழாவுக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 1970களின் ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை மாணவனாகவும் பின்னர் சிறிது காலம் சக விரிவுரையாளராகவும் என்னுடன் தொடர்புபட்டவராகவிருந்தார். படிக்கும் காலத்தில் இவர் மிகுந்த ஊக்கமும், கடின உழைப்பும், சிந்தனைத்திறனும், முரண்பாடற்ற பண்புகளும் கொண்டவராகத் திகழ்ந்தார். ஆசிரியப் பணியை தனது விரும் பிய துறையாகத் தெரிவுசெய்து பல பாடசாலைகளில் சிறப்புறக் கல்வியாற்றி பின்னர் கல்வியியல் விரிவுரையாளராகவிருந்து இன்று பேராசிரியராக வளர்ச்சி பெற்றுள்ளமை அவரது திறமையை எடுத்துக்காட்டுகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஒரு சில தமிழ் விரிவுரையாளர்களே இருந்தனர். இவர்கள் தங்கள் பதவிக்குரிய கடமையிலும் பார்க்க மிகக் கூடுதலான கடமையை தமிழ் மக்களின் நலனுக்காக செய்யவேண்டியிருந்தது. இந்நிலையில் கருணாநிதி அவர்களின் விரிவுரையாளர் பணி மிகவும் போற்றுதற்குரியது. இவரது முயற்சியினால் கல்விப்புலத்தில் தமிழ்மொழி மூல பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இவர் கல்வி சார்ந்த கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் வாண்மை விருத்தியை முன்னெடுத்துள்ளார். மேலும் இன்றைய தேசிய, பிரதேச கல்வி சார்ந்த பிரச்சினைகளில் தெளிந்த ஞானமும் சிந்தனையும் செயற்திறனும் கொண்டவராக விளங்குகின்றார்.

கருணாநிதி அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் சேவையாற்றக்கூடிய தகைமை பெற்றிருப்பதால் நாட்டினதும், தமிழ் மாணவர்களினதும் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்ற வேண்டும் என வேண்டுகின்றேன். இவரது சேவை சிறக்க வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச்செய்தி

பேராசிரியர் எம்.கருணாநிதி அவர்கட்கு ஒரு கௌரவிப்பு விழா அவரது பிறந்தமண்ணில் எடுக்கவிருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 1969ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியர் கருணாநிதி அவர்களுடன் நான் தொடர்புள்ளவனாக இருந்து வருகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் விரிவுரையாளராக தனது தொழில் வாழ்க்கையை நடத்தி வந்த நண்பர் கருணாநிதி அவர்கள் தனது கடின உழைப்பினால் கல்வித் துறையில் பேராசிரியராக உயர்வு பெற்றுள்ளமை இலங்கையின் கல்வித்துறையில் பயிலுபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நாங்கள் இருவரும் ஒரே ஆண்டில் 1969இல் இணைந்தோம். முதலாம் ஆண்டில் ஒன்றாக கல்விகற்று இரண்டாம் ஆண்டில் அவர் புவியியல் சிறப்புக் கற்கையை மேற்கொள்ள நான் கல்வியியல் சிறப்புக் கற்கையை மேற்கொண்டேன். அக்காலத்திலிருந்தே எமது நட்புத் தொடர்ந்தது.

பழகுவதற்கு இனியவரான நண்பர் கருணாநிதி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்படும் முதுகல்விமாணிக் கற்கைநெறிக்கு வருகைதரு விரிவுரையாளராக 2007 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக முதுகல்விமாணிக் கற்கைநெறியை பேராசிரியர் கருணாநிதி அவர்களது உதவியாலும் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் சபா. ஜெயராஜா, பேராசிரியர் க.சின்னத்தம்பி ஆகியோரது உதவியாலும் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. கிழக்குப் பல்கலைக்கழகக் கல்வித்துறைக்கு இவர்கள் அனைவருமே என்றும் உதவிவருபவர்கள்.

தேசிய கல்வி ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளராகச் செயற்படும் பேராசிரியர் மா.கருணாநிதி அவர்கள் பல தேசிய மட்டக் கல்வியாய்வுகளை மேற்கொண்டு பூர்த்தி செய்தவர். அன்னாருக்கு விழாவெடுக்கும் இச்சமயத்தில் அவர் தேகாரோக்கியத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்து இந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் மா.செல்வராஜா,தலைவர்,**
**கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



"எண் என்ப, ஏனை எழுத்தென்ப, இவ் விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்ற வள்ளுவன் சொல்லுக்கிணங்க, கண்ணெனக் கருதும் கல்விச் செல்வத்தை மாணவர்க்கு வழங்கும் கல்விச் சேவையில் ஈடுபட்டு வரும் திரு.மார்க்கண்டு கருணாநிதி அவர்கள் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றுள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு வளங்களும் அமையப்பெற்ற வடமராட்சியின்கண் விளங்கும் அல்வாய் எனும் பழமைமிகு கிராமத்தில் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியைத் தனது கிராமத்திலும், உயர் கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், பட்டப் படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பயின்று புவியியல் சிறப்புப் பட்டதாரியானார். இப் பல்கலைக்கழகத்திலேயே புவியியல் துறையில் விரிவுரையாளராகக் கல்விப் பணியில் அடியெடுத்து வைத்த மார்க்கண்டு கருணாநிதி அவர்கள், தான் கற்ற கல்வியின் வழி நுவரெலியா மாவட்டத்தில் மாணவ உலகிற்கு நல்லாசிரியராய், அதிபராய் 16 வருடங்கள் நற்சேவைபுரிந்து நல்லதொரு சமுதாயத் தோன்றலுக்கு வித்திட்டுள்ளார். தொடர்ந்து கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்வியியல் பீடத்தில் கல்வித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிவருகையில், கல்வியியல் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றுள்ளமை இவரது கல்வித்துறைப் பயணத்தின் மேன்மையான வளர்ச்சிப் பாதையை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காய் பல்வேறு பதவிகளிலும் அர்ப்பணிப்பான சேவையில் தன்னை ஈடுபடுத்தி அவர்களின் கல்வித்திறனை வளர்த்ததோடமையாது, தனது கல்வி நிலையினையும் மேம்படுத்தியுள்ளார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிவரும் மகத்தான பணியோடு மட்டுமல்லாது தேசிய கல்வி ஆராய்ச்சிச் சபையின் பணிப்பாளராகவும் பதவி வகித்துவரும் பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி அவர்கள், தனது உன்னதமான சேவைகளினால் எதிர்கால சமூகத்திற்கு பல்லாண்டு காலம் சிறந்த வழிகாட்டியாகத் திகழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. இமெல்டா சுகுமார்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,**
**யாழ். மாவட்டம்.**

## வாழ்த்துச்செய்தி



பேராசியராகப் பதவிஉயர்வு பெற்ற உயர்திரு மார்க்கண்டு கருணாநிதி அவர்களைப் பாராட்டப் பெருவிழா எடுப்பதனை அறிந்து மனம் பூரிப்படைவதோடு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெருமை அடைகின்றேன்.

யா/சிறிலங்கா வித்தியாலயம், யா/தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக்கல்விக்கு அத்திவாரம் இட்டு இடைநிலைக்கல்வியை யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயத்திலும் கற்று, உயர்ந்த பெறுபேறுகளையும் வெளிக்காட்டி, பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகி, அங்கேயும் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டி ஆசிரியராய், அதிபராய் பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளராகிக் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்று இன்று பேராசிரியராக உயர்ந்துள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்துடன் இணைந்து இயங்கும் National Education Research and Evaluation Centre (NEREC) இலும் பணிப்பாளராகப் பணி புரிந்து பல பெறுமதி மிக்க ஆய்வுகளையும் செய்துள்ளார். NEREC ஆய்வு முடிவுகள் கல்விப் புலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கல்விப்புலம் சார்ந்த அனைவரையும் உற்சாகப்படுத்தியது. கடந்த காலங்களில் கல்வி ஆணைக்குழுவின் சில செயற்பாடுகளுக்கும் ஒத்தாசை வழங்கிச் செயற்பட்டுள்ளார். யா/நெல்லியடி மகா வித்தியாலயத்தில் எனது சிரேஷ்ட மாணவ நண்பனாகிய உயர்திரு மா.கருணாநிதி அவர்கள் இன்று கல்விப் பரப்பில் பெரு விருட்சமாக வளர்ந்துள்ளார். நாடறிந்த கல்விமானான உயர்திரு. மா.கருணாநிதி அவர்கள் அடக்கமானவர். அத்துடன் ஆழமானவர். கல்விப்புலம் சார்ந்தவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

விழா நாயகனது கல்விப்பணி எதிர்காலத்தில் மேலும் சிறப்படைய வேண்டுமென ஆசிர்வதிப்பதோடு நல்லதொரு பணியை முன்னெடுத்த விழா ஒழுங்கமைப்பாளர்களையும் வாழ்த்துகின்றேன்.

**வீ.இராசையா**
**ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

## டு கருணாநித் அவர்களின் ப் பாதையில்

காழும்புப் பல்கலைக்கழகம்
ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம்
கத்துக்கான தேசியக் குழு உறுப்பினர்
றந்த பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
ாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- வவுனியா வளாகம்
ல்லூரி, நுவரெலியா (1984- 1991)
க் கல்லூரி, நுவரெலியா (1977-1984)
றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம் (1975-1976)

ம் (புவியியல்), பேராதனைப் பல்கலைக்கழகம், 1974
ல்வி), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1989
காழும்புப் பல்கலைக்கழகம், 2001

## னையது உயர்வு

சியில் புகழ்பெற்று விளங்கும் யா/நெல்லியடி மத்திய லயத்தில் ஆசிரியப்பணி புரியும் வாய்ப்பு 1968இல் எனக் து. இன்று போல அன்றும் இக்கல்லூரியானது அதிபர் ம்பரம் அவர்களின் சிறந்த நிர்வாகத்தின்கீழ் கற்பித்தலுக் ளையும் கற்பித்தலுக்கேற்ற சூழலையும் கொண்டு விளங் புவியியல் ஆசிரியையாக நியமனம் பெற்றநான் க.பொ.த. ப்பில் பாடம் கற்பிக்கச் சென்றபோது மாணவச் செல்வங் ர் வரவேற்றனர். உயர்கல்வி வாய்ப்பைப் பெற வேண்டும் கோளுடன் கற்கும் ஆர்வம் உள்ளவர்களாக அவர்கள் ர். அவர்களுள் செல்வன் மா.கருணாநிதியும் ஒருவர். தி பல்கலைக்கழகத்தில் புவியியலைச் சிறப்புப் பாடமாகப் றார். பின் ஆசிரியப்பணியில் தன்னை அர்ப்பணித்தார். துகல்விமாணிப் பட்டமும் பெற்றார். ஆசிரியராக இருந்தவர் னார். விரிவுரையாளர் இன்று பேராசிரியராக உயர்நிலை க கொள்கிறது.

அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
த்து அனையது உயர்வு

**திருமதி.சரோஜினிதேவி.சிவஞானசுந்தரம்**

# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா?

7



இதன் விளைவாக பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகைமை பெறுகின்ற மாணவர்களிலிருந்து உண்மையில் அனுமதி பெறுகின்ற மாணவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்தது.

1969/70 ஆம் ஆண்டுகளில் 33.69% ஆக இருந்து இன்று 15% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறு தகுதி பெறுகின்ற மாணவர்களுக்குக் கதவடைப்பு செய்வதன் மூலம் கல்வியில் சமத்துவக் கோட்பாடு மீறப்பட்டது.

1970களில் தான் இந்நாட்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு கல்வியில் சமத்துவத்தை மீறி கல்வியில் பிரதேச சமத்துவத்தைப் பேணுவதற்காக மாவட்ட ரீதியான தரப்படுத்தலும் திறமை ரீதியான தரப்படுத்தலும் ஒருங்கே கொண்டுவரப்பட்டது.

இந்நாட்டில் இனப்பிரச்சினையிருந்த போதிலும் தரப்படுத்தல் காரணமாக விரக்தியுற்ற இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடுகிற இக்கட்டான நிலைக்கு இனப் பிரச்சினை விஸ்வரூபமெடுத்ததிற்கு பல காரணிகள் இருந்தாலும், முதன்மைக் காரணி தரப்படுத்தல் முறைமை எனக் கற்றோர் இன்னும் கூறுகின்றனர்.

இதனால் ஏற்பட்ட யுத்தம் இந்நாட்டையே எல்லாவிதத்திலும் அழித்ததுடன் அது தொடர்ந்து 3 தசாப்தங்களாக நீடித்ததுடன் இன்றும் அதன் வடுமாறாத நிலையில் இன்னும் பல ஆயிரம் மக்கள் துன்பப்பட்டும் அகதி வாழ்க்கை அந்தஸ்திலேயே வாழ்வது மாத்திரமின்றி பல இலட்சம் பேர் தங்களது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக இந்த நாட்டைவிட்டு புலம்பெயர்ந்தவர்களாக வாழுவதும் தெரிந்ததே.

பல்கலைக்கழகங்கள் மாத்திரமல்லாது ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் அரசாங்கம் வசதிகளை அதிகரிக்காத காரணத்தினால் இப்பிரச்சினை மேலும் மோசமடைந்தது.

உண்மை என்னவெனில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதியைக் கட்டுப்படுத்தியமை உன்னதத்தை பேணுவதற்காக இல்லை. சமத்துவத்துக்கும், உன்னதத்துக்கும் இடையே ஒரு நியாயமான சமநிலையைப் பேணவேண்டுமெனில் பொருளாதாரத்திட்டத்தின் ஒரு பகுதியாக உயர்கல்விக்கான திட்டமும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

பத்தாண்டுத் திட்டம் (1959/68) மற்றும் ஐந்தாண்டுத்திட்டம் (1972/76) ஆகியவற்றை நடைமுறைப்படுத்திய போதிலும் அரசாங்கம் இதனைக் கவனிக்காதிருந்தது.

> "கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான, கட்டொழுங்குள்ள,தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்"

பல்கலைக்கழக மானியங்கள் 1980இல் ஸ்தாபிக்கப்படும் வரை அரசாங்கம் உயர் கல்விப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எதுவித திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை.

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆய்வுப்பிரிவு ஒரு ஐந்தாண்டுத்திட்டத்தை (1984/88) ஆரம்பித்து கவனமாகக் கண்காணிக்கப்பட்டு ஒவ்வொரு இரு வருடங்களும் மீளாய்வு செய்யப்பட்டது. விரிவாக்கத்தைவிட தரத்தை உறுதிப்படுத்துவதே இத்திட்டத்தின் உண்மையான நோக்காக இருந்தது. ஆனால் 1994 இல் அரசாங்கம் மாறியதைத் தொடர்ந்து புதிய ஆணைக்குழு அமைக்கப்பட்டு திட்டமிடல் பெருமளவுக்கு கைவிடப்பட்டு சமூக பொருளாதாரத் தேவைகளைக் கருத்திலெடுக்காது வெறுமனே அரசியல் அழுத்தங்களுக்காக புதிய பல்கலைக்கழங்கள் உருவாக்கப்பட்டன.

உலகளாவிய புதிய மாற்றங்களுக்கு ஏற்றவாறு கலைத்திட்டம் முழுமையாக மீளாய்வு செய்யப்படவில்லை. உன்னதமும், சமத்துவமும் குழம்பிப் போன நிலையில் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்கல்வியுடன் தொடர்புபடுத்தும் நோக்கத்துடன் 1987இல் தேசிய கல்வி நிறுவகமும் 1991 இல் தேசிய கல்வி ஆணைக்குழுவும் அமைக்கப் பட்டன. ஆனால் இவை கூட அரசியல் தலையீட்டுக்குட்பட்டு சுதந்திரமாக இயங்கி நோக்கங்களை அடையக் கூடியதாக இல்லை.

**கல்வித் துறையில் பாரிய வீழ்ச்சி**

எந்த ஒரு சமூகத்தினதும் நல்வாழ்விற்கும் எதிர்காலத்துக்கும் முழுநிறைவான கல்வி இன்றியமையாததாகும்.

உண்மையில் கல்வியினால் உருவாக்கப்படும் மனித வளமே ஒரு சமுதாயத்தின் பெறுமதிமிக்க வளமாகும். ஒரு நாட்டு மக்களுக்கு அத்தகைய கல்வி வழங்குவது அந்நாட்டு அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமைகளில் ஒன்றாகும்.

இலங்கை சுந்திரமடைந்த காலம் முதல் நாட்டை ஆண்ட அரசுகள் கல்வியின் விருத்திக் கென பெருந்தொகையான பணத்தை ஒதுக்கிச் செலவிட்டன. இதன் விளைவாக எமது பிராந்தியத்துக்குரிய சகல நாடுகளிலும் பார்க்க உயர்வான எழுத்தறிவு வீதம் (ஏறத்தாழ 92%) நம் நாட்டு மக்களிடையே காணப்படினும் நாட்டு மக்களின் தேவைகளுக்கு முகங்கொடுக்கவோ, பொருளாதார விரிவாக்கத்துக்கு வேண்டிய தேவைகளை பூர்த்தி செய்யவோ, இந்த 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய முறையில் மக்களை உருவாக்குவதிலோ நாடு வெற்றி காண்பதில் தவறிவிட்டது. உண்மையில் கல்வித் துறையின் எல்லா மட்டங்களிலும் கல்வியின் மதிப்பளவிலும், தரத்திலும் பாரிய வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.

கட்டாயக்கல்வி பெற வேண்டிய வயதுடைய (5-14 வருடங்கள்) பிள்ளைகளில் ஏறக்குறைய 14% ஆனோர் பாடசாலைக்கு செல்வதில்லை.

5ஆம் தரத்தில் உள்ள பிள்ளைகளில் 5இல் 4 பங்கினர் எழுத்தில் அடைய வேண்டிய திறமை நிலைமை அடையாதும், கிராமப்புறங்களில் இதைவிட அதிகமானோரும் காணப்படுகின்றனர்.

1995இல் நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் பத்திலொரு பங்கினர் எட்டுப்பாடங்களிலும் சித்தியடையத்தவறியுள்ள அதேவேளையில் கணித பாடத்தில் சாதாரண அடைவைக் கூட கணிசமான வீதத்தினர் பெறமுடியாதுள்ளனர்.

தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

மேலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பதினொன்றில் ஒரு பங்கினர் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைத் தவறியுள்ளனர்.

**கல்விச் சீர்திருத்தங்கள் கவனத்திற்கு எடுக்காதவை**

இலவசக் கல்வி முறைமை அமுலாக்கலின் பின் குறிப்பாக நாடு சுதந்திரமடைந்த காலத்தின் பின் இந் நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்த அரசுகளால் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் சிறந்த வாழ்க்கைக்குரிய அறிவு,விளக்கம், செயற்திறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை வழங்கத் தவறிவிட்டன.(தொடரும்)

# யாழ்ப்பாணத்து இசை நாடக மரபும் வடமராட்சியும்

2



''சுபத்திரை ஆழ்வார்'' என்று அழைக்கப்பட்டு வந்த எம்.பி.கிருஷ்ணாழ்வார் பெண் பாத்திரங்களில் மிகவும் சோபித்தார்.

புராண, இதிகாச இசை நாடகங்களில் சக்களத்தியராக வரும் பாத்திரங்களிடையே நிகழும் "சக்களத்திப் போராட்டம்" அந்நாளில் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. அநேக மாக இசை நாடகங்களில் எம்.பி.கிருஷ்ணாழ்வாரும் சரவண முத்துவும் சக்களத்தி யராக தோன்றி, "சக்கை போடு" போட்டனர். இசை நாடகங்களுக்கான பாடல்களை எழுதுவதிலும் கவி புனைவதிலும் வல்லவராக எம்.பி.கிருஷ்ணாழ்வார் விளங்கினார்.

1945 ஆம் ஆண்டு முதல் அல்வாய் மனோகர கான நாடகசபாவின் அண்ணாவியாராகவும் இயக்குநராகவும் விளங்கி வந்தவர் கலைஞர் எஸ்.தம்பிஜயா ஆவார். ஒரு நாளிலேயே முழு இரவு ஒன்றுக்கான இசைநாடகம் ஒன்றின் எழுத்துருவையும் (Script) எழுதி அந்நாடகத்துக்கான பாடல்களையும் இயற்றும் ஆற்றல் கொண்டவராக எஸ்.தம்பிஜயா விளங்கினார். இவரது நடிப்புப் பண்ணையில் ஆரம்ப காலங்களில் நடிப்பும் நாடகமும் பயின்றவர்தான், பின்னாளில் இசைநாடகத்துக்கு இலக்கண மாகத் திகழ்ந்த நடிகமணி வி.வி.வைரமுத்து ஆவார்.

நடிகமணி வைரமுத்து அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவினால் தயாரிக்கப்பட்ட "சம்பூர்ண அரிச்சந்திரா" நாடகத்திலேயே முதன்முதலில் முழுமையான பாத்திரம் ஏற்று நடித்தார். பாடசாலைக் காலத்தில் வடமராட்சியில் தங்கி கல்வி கற்றுவந்த வைரமுத்து, பாடசாலை மட்ட நாடகங்களில் சிறு பாத்திரங்களில் தோன்றி நடித்து வந்தாரெனினும், முதன் முதலில் அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா அண்ணாவியம் செய்த சம்பூர்ண அரிச்சந்திராவில் 'முன் சந்திரமதி' ஆகவும் 'பின் அரிச்சந்திரன்' ஆகவும் நடிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பமே வைரமுத்துவின் வாழ்வின் திருப்பு முனையானது, அண்ணாவியார் எஸ்.தம்பிஜயா இந் நாடகத்தில் 'முன் அரிச்சந்திரன்' ஆகவும் 'பின் சந்திரமதி' ஆகவும் நடித்தார். ஆறுபேரை மட்டும் கொண்டு முழு இரவு.நாடகமாகத் தயாரிக்கப்பட்ட 'சம்பூர்ண அரிச்சந்திரா' ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் லோகிதாஸனாக நடித்த வி.பாலசிங்கம், பின்பு யாழ். நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற, அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவின் அண்ணாவியத்தில் உருவான 'துருவன்' நாடகத்திலும் துருவனாக நடித்துப் புகழ்பெற்றவர். ஒட்டுசுட்டான் மேடையேற்றத்தின் பின்பு பல்வேறு புராண, இதிகாச இசைநாடக மேடைகளில் கதாநாயகன்- கதாநாயகி வேடங்களைப் புனைந்து ஒன்றாக நடித்துவந்தார்கள்.

கரவெட்டி பெரியபொடி அண்ணாவியாரின் மகனான எம்.பி.அண்ணாசாமி ஆசிரியர் ஆற்றல் மிக்க ஒரு கலைஞர் தனிக் குழுவொன்றை அமைத்து இயக்கி வந்த இவர் பின்பு அண்ணாவியார் எஸ்.தம்பிஜயாவுடன் இணைந்துகொண்டார். எஸ்.தம்பிஜயா, எம்.பி.அண்ணாசாமி, வி.வி.வைரமுத்து ஆகியோர் இணைந்து பல இசை நாடகங்களை வழங்கிவந்தனர். கே.நற்குணம், வி.கே.இரத்தினம் போன்ற கலைஞர்களும் இப் பண்ணையிலேயே பல நடிப்பு நுணுக்கங்களையும் பாடல் நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டனர்.

பின்னாளில் வி.வி.வைரமுத்து, வி.கே. இரத்தினம், கே.நற்குணம் ஆகியோர் 'வசந்தகானசபா' நாடகமன்றை ஆரம்பித்து, பலநாடகங்களை மேடையேற்றினர். ஆயினும் அந்நாளில் பல்வேறு திறமைகளும் ஆற்றல்களும் கொண்ட புகழ்பூத்த கலைஞர்களை இணைத்து மேடையேற்றப்பட்ட ஸ்பெஷல் இசைநாடகங்களில் ஒன்றாக நடித்து, இசைநாடகமரபுக்குப் பேரும் புகழும் சேர்த்தனர். மாதனைக் கலைஞர்களான செல்லத்துரை, மகாலிங்கம், சிவப்பண்ணா, இராசதுரை போன்றோரும் ஒரு குழுவாக இசை நாடகங்களில் நடித்துவந்தனர். இக்கலைஞர்களின் பணி இன்று இளையோரால் தொடரப்பட்டுவருகின்றது.

அல்வாய் மனோகரகான நாடகசபாவின் தற்போதைய இயக்குநராக கலாநிதி த.கலா மணி விளங்குகிறார். பல்வேறு இசை நாடகங் களைத் தயாரித்து அண்ணாவியம் செய்து, பல்வேறு நடிகர்களைப் பயிற்றுவித்தும் கலைஞர்களுடன் இணைந்தும் அவற்றை மேடை யேற்றிவருகின்றார். கலைமகிழ்நன் வி.கே.பாலசிங்கம் அந்திராசியாகவும் அண்ணாவியார் த.கலாமணி பூதத்தம்பியாகவும் இணைந்து நடித்த 'பூதத்தம்பி' இசைநாடகம் வடபகுதியின் பல்வேறு பாகங்களிலும் மேடையேற்றப்பட்டு ரசிகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

கலாநிதி த.கலாமணி இன்று இளையோர் பலரைப் பயிற்றுவித்து, அவர்களுக்கான இசைநாடகங்களை எழுதித் தயாரித்து அண் ணாவியம் செய்துவருகிறார். இந் நாடகங்களில் வெ.துஷ்யந்தன், க.பரணீதரன், வி.செந்தூரன், செ.சுரேந்திரா, சி. நவராஜ், வெ.சிந்துஜன், க.மதனாஹரன், த.சரசாங்கி, க.ஜெயதர்சன் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

வெ.துஷ்யந்தன்

ஒரு காலத்தில் சிறப்புற விளங்கி, இடைக் காலத்தில் காலச்சூழ்நிலையால் செயல் குன்றியிருந்த இசைநாடகம், இன்று மீண்டும் துளிர்த்து வளர்ந்துவருகின்றது. இதற்கான களனாக வடமராட்சி இன்றும் விளங்கிவரு கின்றது. ✠

# மன்னாரில் தனித்து போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

மன்னார் மற்றும் முசலி ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது மரச் சின்னத்தில் தனித்தே போட்டியிடவுள்ளதாக கட்சியின் அரசியல் உயர்பீடம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம்திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் மன்னார் மற்றும் முசலி ஆகிய 2 பிரதேசசபைகளில் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று போட்டியிடவுள்ளதாக அக்கட்சி உறுப்பினர் ஆர்.மக்புல் தெரிவித்தார்.

மேலும், மன்னார் நகரசபை, மாந்தை மேற்கு பிரதேச சபை, நானாட்டான் பிரதே சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான தெரிவு இன்றும் நாளையும் அரசியல் உயர்பீட உறுப்பினர் ஆர். மக்புல் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு பாகிஸ்தான் கண்டனம்

(கொழும்பு)

பாகிஸ்தானிய இராணுவத் தளபதி அஷ்பாக் பர்வேஸ் கயானி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா சென்றுள்ளமைக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளதாக லக்பிம செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பர்வேஸ் கயானி உலகின் பலம் வாய்ந்த தலைவர்களின் போர்ப்ஸ் சஞ்சிகையின் பட்டியலில் 29 ஆவது இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்திப்பதற்கு முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் அவரது வருகையை புறக்கணித்து ஜனாதிபதி அமெரிக்கா சென்றுள்ளமை தொடர்பில் பாகிஸ்தான் அரசாங்கம் கடுமையான கண்டனம் வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இலங்கை வரும் போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரைப் புறக்கணித்து இங்கிலாந்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி கொள்ள பாகிஸ்தான் இலங்கைக்கு பாரிய ஒத்துழைப்பை வழங்கியது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி பாகிஸ்தானிய தலைவர்களை புறக்கணித்து வருவது அவரது இராஜதந்திர சாணக்கியத்தை விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உணவுப் பொருட்களுக்கான விலைகள் உயர்வடையும்

## அரசாங்கம் அறிவிப்பு

நாட்டில் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வடையும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரிசியைத் தவிர்ந்த ஏனைய அனைத்து உணவுப் பொருட்களுக்குமான விலைகள் தற்காலிகமாக உயர்வடையக்கூடும் என விவசாய அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மழைவெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அனுராதபுர, பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் மழை வெள்ளத்தினால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெள்ள நிலைமைகள் குறித்து பாராளுமன்றில் விளக்கம் அளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தால் அண்மையில் கச்சாய் தெற்கு மாதர் முன்பள்ளிகளின் அனுசரணையுடன் ஒரு தொகுதி மரக்கன்றுகள் கிராமங்கள் தோறும் நாட்டப்பட்டது. கழகத்தலைவர் லயன் எஸ்.தேவகுமார் மரம் நாட்டி வைப்பதையும் அருகில் முன்னாள் தலைவர் லயன் சி. சரவணமுத்து ஜே.பி., மாதர்சங்க உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.


# தேவை

**கடற்கரையை அண்மித்த காணி, காரியாலய இடவசதி மற்றும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள காணி உடனடியாகத்தேவை.**

ஹோட்டல் செயற்றிட்டங்கள் மற்றும் காரியாலய இடவசதிக்கான கடற்கரைக்கு முகப்பாக அமையப்பெற்ற காணி மற்றும் யாழ் குடா நாட்டின் மத்தியில் அமையப்பெற்ற காணி ஆகியன உடனடியாக தேவைப்படுகின்றன. தங்களின் காணி பற்றிய விபரங்களை அறியத்தரவும். மேற்படி இடங்களை பார்வையிடும் பொருட்டு ஜனவரி 21ஆம் திகதி முதல் 23 வரை ஹோட்டல் 'டில்கோ' மற்றும் யாழ்ப்பாண சர்வதேச சந்தையில் இல.149 மற்றும் 150 இல் அமைந்துள்ள 'மெக்வூட்' காட்சியறையிலும் நாம் பிரசன்னமாயிருப்போம்.

தொடர்புகளுக்கு :
சூதீன் : 0778424248
வித்யா : 0774632726
தொலைநகல் : 0115338024
மின்அஞ்சல் : projects@mackwoods.com


# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.01 22

★ 1506 - 150 சுவிஸ் பாதுகாப்புப் படைகளைக்கொண்ட முதற் தொகுதி வத்திக்கானை அடைந்தது.

★ 1798 - நெதர்லாந்தில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★ 1840 - பிரித்தானிய குடியேற்றவாதிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.

★ 1863 - ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.

★ 1879 - தென்னாபிரிக்காவின் சூலுப் படைகள் ஐசண்டல்வானாவில் வைத்து பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.

★ 1889 - கொலம்பியா கிராமபோன் வோஷிங்டனில் அமைக்கப்பட்டது.

★ 1899 - ஆறு அவுஸ்திரேலிய காலனிகளின் தலைவர்கள் கூட்டமைப்புப் பற்றி விவாதிக்க மெல்போர்னில் கூடினர்.

★ 1901 - 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்து விக்டோரியா மகாராணி தனது 81 ஆவது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.

★ 1905 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

★ 1906 - பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவர் தீவில் வலென்சியா என்ற பயணிகள் கப்பல் பாறைகளுடன் மோதியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் லிபியாவின் டோப்ருக் நகரை நாசிப் படைகளிடம் இருந்து கைப்பற்றியது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயில் ஜப்பானியரின் குண்டுவீச்சினால் பெரும் சேதமுற்றது.

★ 1952 - உலகின் முதலாவது பயணிகள் ஜெட் விமானம் (BOACயின் Comet) சேவைக்கு விடப்பட்டது.

★ 1957 - சினாய் தீபகற்பத்தில் இருந்து இஸ்ரேல் வெளியேறியது.

★ 1964 - கென்னத் கவுண்டா வட றொடீசியாவின் முதலாவது ஜனாதிபதியானார்.

★ 1973 - நைஜீரியாவின் கானோ விமான நிலையத்தில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் 176 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1980 - நோபல் பரிசு பெற்ற சோவியத் இயற்பியலாளர் அந்திரே சாகரொவ் மாஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.

★ 1984 - ஆப்பிள் மக்கிண்டொஷ் கணனி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1992 - சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.

★ 1999 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் அவுஸ்திரேலிய கிறிஸ்தவ மதப் போதகர் கிரஹாம் ஸ்டைனஸ் என்பவரும் அவரது இரு மகன்களும் இந்துத் தீவிரவாதிகளால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

★ 2003 - பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொகுப்பு மேற்கொள்ளப்பட்டது.

★ 2004 - ஆர்க்குட் தொடங்கப்பட்டது.

## பிறப்புகள்

★ 1561 - பிரான்சிஸ் பேக்கன், ஆங்கிலேய மெய்யியலாளர் (இ. 1626)

★ 1788 - ஜார்ஜ் கோர்டன் பைரன், ஆங்கில-ஸ்கொட்டியக் கவிஞர் (இ. 1824)

★ 1901 - விக்டோரியா, பிரித்தானிய மகாராணி (இ. 1819)

★ 1908 - லேவ் லாண்டாவு, நோபல் பரிசு பெற்ற இரகசிய இயற்பியலாளர் (இ. 1968)

★ 1909 - ஊதாண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் (இ. 1974)

★ 1922 - தி.வே.கோபாலையர், தமிழறிஞர் (இ. 2007)

★ 1936 - அலன் ஹீகர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1988 - கிரெக் ஒடென், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

★ 1666 - ஷாஜகான், முகலாலயப் பேரரசர் (பி. 1592)

★ 1922 - பிரெட்ரிக் பாஜெர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1837)

★ 1947 - சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்தின் பன்மொழிப் புலவர் (பி.1875)

★ 2005 - வேந்தனார் இளங்கோ, அவுஸ்திரேலியத் தமிழறிஞர்

★ 2008 - ஹீத் லெட்ஜர், ஹொலிவுட் நடிகர் (பி. 1979)

# சீனாவுடன் ஆரோக்கியமான போட்டியை எதிர்கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது

## அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

சீனாவுடன் ஆரோக்கியமான போட்டியையே அமெரிக்கா எதிர்பார்க்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நான்கு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோவை சந்தித்த பின் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியதாவது, சீனாவிடமிருந்து ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை அமெரிக்கா எதிர்பார்க்கும் அதேசமயம் ஆரோக்கியமான போட்டியை எதிர்கொள்ளவே விரும்புகிறது.

எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இரு நாடுகளிடையே ஒத்துழைப்பு இருப்பது அவசியம் என்பதை இருவருமே உணர்ந்துள்ளோம். நட்பு ரீதியிலான போட்டி தான் நீண்ட கால அடிப்படையில் பலன் அளிக்கும் என்பது பேச்சுவார்த்தையில் தெரிய வந்துள்ளது.

முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு இரு நாடுகளிடையே ஏற்பட்டால் அது இரு நாடுகளுக்குமே பலன் அளிக்கும். அமெரிக்காவும் சீனாவும் ஒத்துழைப்புடன் இருப்பது உலகுக்கே நல்லது.

ஜி-20 நாடுகளின் உறுப்பு நாடுகளுடன் இணைந்து சர்வதேச பொருளாதார சரிவிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து வருகின்றோம்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சிலில் உள்ள உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் ஈரானுக்கு எதிரான பொருளாதார தடைகள் கொண்டு வரப்பட்டன.

இப்போது கொரிய பகுதியில் நிலவி வரும் பதற்ற சூழலைத் தணிக்க வேண்டியுள்ளது. சூடானுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு சீனா ஆதரவு அளித்தது பாராட்டத் தக்கது.

அமெரிக்காவும் சீனாவும் தனித்தனியே சாதிக்க முடியாத துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டு பரஸ்பரம் முன்னேற்றம் காண முடியும். அத்தகைய துறைகளைக் கண்டறிந்து கூட்டாக செயற்படுவது நல்லது.

அதேசமயம் போட்டித் துறைகளில் இரு நாடுகளும் ஆரோக்கியமான போட்டியை மேற்கொள்வது சிறந்தது. இத்தகைய உறவைத்தான் சீனாவிடமிருந்து அமெரிக்கா எதிர்பார்த்தது. 21 ஆம் நூற்றாண்டில் அத்தகைய கட்டத்தை இப்போது எட்டிவிட்டதாகக் கருதுகின்றது.

இரு நாடுகளும் இணைந்து 12 க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை செய்துள்ளன. இதன் மூலம் இரு நாடுகளிடையிலான வர்த்தகம் 4 ஆயிரத்து 500 கோடி டொலர் எட்டும் என்றும் அமெரிக்காவில் சீனாவின் முதலீடு சில ஆயிரம் கோடி டொலர்களைத் தாண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இயந்திர உற்பத்தி முதல் சாஃப்ட்வேர் வரையிலும் விமான போக்குவரத்து முதல் வேளான் துறை வரையிலும் பல்வேறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

இதன் மூலம் 2.35 இலட்சம் அமெரிக்கர்களுக்கு வேலை கிடைக்கும். இது அமெரிக்கர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும்.

சீனாவில் அமெரிக்க நிறுவனங்கள் தங்களது வர்த்தகத்தை செயற்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தருமாறு ஜனாதிபதி ஹூ ஜின்டாவோவிடம் கேட்டுக் கொண்டோம்.

அமெரிக்க நிறுவனங்கள் கொள்முதல் ஒப்பந்தங்களை சீனாவில் பெறுவதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்று கேட்டதாகவும் மேலும் அறிவுசார் சொத்துரிமை காப்பு குறித்து தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து பேச்சு நடத்தியதாகவும் இதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு கருத்து வேறுபாடுகளைத் தடுக்க முடியும்.

கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதில் அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது. இப்பகுதியில் உள்ள கடல்பரப்பில் அமைதி நிலவ வேண்டும்.

தாய்வான் நீரிணையில் பதற்றம் குறைந்துள்ளதால் வர்த்தகம் அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்கும் என்று நம்பலாம். இதே போல கொரிய பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட சீனா முக்கிய பங்காற்ற முடியும் என்று சீன ஜனாதிபதி ஹூ ஜின்டா வோவிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஒபாமா கூறினார்.

வடகொரியா மேற்கொண்டு வரும் அணு ஆயுத தயாரிப்பு அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் ஒபாமா குறிப்பிட்டார். இந்த பிராந்தியத்தை அணு ஆயுதமற்ற பகுதியாக உருவாக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பம் என்றார்.

அணு ஆயுத பரவலைத் தடுக்கும் நோக்கில் ஈரான் மீது சர்வதேச தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தடை முழுவதுமாக அமல்படுத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டினார்.

சீனாவின் எழுச்சி இந்த உலகுக்கே மிகவும் நல்லது என்று குறிப்பிட்ட ஒபாமா பேரழிவு ஆயுதங்களை படிப்படியாக அழிப்பதோடு அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகள் கையில் சிக்கிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். (ஸ்ரீ-2)




# ஈராக்கில் தற்கொலை தாக்குதலில் 50 பேர் பலி

(கர்பலா)

ஈராக்கில் ஷியாட் பிரிவினருக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் மசூதிகள் மற்றும் கும்பலாக கூடும் இடங்களில் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். கர்பலா நகரில் ஷியாட் பிரிவினரின் மசூதிகள் உள்ளன. அரேபியன் தினத்தையொட்டி நேற்று முன்தினம் சிறப்பு தொழுகை நடந்தது. அதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அப்போது அங்குள்ள 2 மசூதிகளில் தற்கொலை தாக்குதல்கள் நடந்தன.

வெடி பொருட்கள் ஏற்றப்பட்ட வாகனங்களில் வேகமாக வந்த தீவிரவாதிகள் மசூதிகள் அருகே வந்ததும் குண்டுகளை வெடிக்க செய்தனர். இதில் 45 பேர் அதே இடத்தில் உடல் சிதறி பலியானார்கள். அவர்களில் 2 இமாம்கள், பெண்கள், குழந்தைதைகள் அடங்குவர்.

இச்சம்பவத்தில் 150 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். முதல் குண்டு வெடிப்பு சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் நடந்தது. 2 ஆவது சம்பவம் 3.20 மணிக்கு நடந்தது.

இத்தகவலை கர்பலா மாகாண கவுன்சில் தலைவர் மொகமத் ஹமித் அல் முஸ்காவி தெரிவித்துள்ளார். தெற்கு பக்தாத்தில் ஷியாட் பிரிவினரின் மசூதி அருகேயுள்ள அல்- ரஷீத் காய்கறி சந்தையில் குண்டு வெடித்தது. அதில் ஒருவர் கொல்லப்பட்டார். 9 பேர் காயம் அடைந்தனர். மத்திய ஈராக் பகுதியில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 4 பேர் இறந்தனர். 5 பேர் காயம் அடைந்தனர். இச்சம்பவங்கள் ஈராக்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (ஸ்ரீ)

# தெற்கு சூடான் தனி நாடாகிறது




(ஜூபா)

தெற்கு சூடான் தனி நாடாகிறதை ஆதரவு தெரிவித்து 97.5 சதவீத வாக்குகள் பதிவாகி இருப்பதாக சூடான் தேர்தல் ஆணைக்குழுவின் துணைத் தலைவர் டிமோன் வானி அறிவித்துள்ளார்.

வடக்கு சூடானில் இருந்து தெற்கு சூடான் பிரிந்து தனி நாடாக சமீபத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றுகூறப்பட்ட நிலையில் தற்போது ஆரம்ப கட்ட முடிவுகள் வெளியாகி உள்ளது.

தனி நாடாக பிரிய ஆதரவு தெரிவித்து 97.5 சதவீத தெற்கு சூடான் மக்கள் வாக்களித்து இருப்பதாக தேர்தல் ஆணைக்குழுத் துணை தலைவர் டிமோன் வான் அறிவித்துள்ளார்.

மேலும் தெற்கு சூடான் தேர்தல் கமிஷன் செய்தி தொடர்பாளர் சுவாத் இப்ராகிம் இசா அந்நாட்டின் அதிகாரபூர்வ சுனா செய்தி பிரிவுக்கு வழங்கிய பேட்டியில்,

வடக்கு சூடானில் பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 857 வாக்காளர்களில் 69 ஆயிரத்து 597 பேர் வாக்களித்தனர்.

இவர்களில் 41 சதவீதம் ஒருங்கிணைப்புக்கும் 55 சதவீதம் தனி நாட்டிற்கு ஆதரவாக வாக்கு அளித்தனர் என்றார்.

தெற்கு சூடானில் 10 மாநிலங்கள் உள்ளன. தெற்கில் கிறிஸ்தவர்கள், ஆபிரிக்கர்கள் அதிகளவில் உள்ளனர். வடக்கில் முஸ்லிம்கள் அதிகம் உள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழு துணைத் தலைவரின் இந்த அறிவிப்பை அடுத்து தெற்கு சூடான் ஜனாதிபதி சில்வா கிர் ஆயிரக்கணக்கான மக்களுடன் இணைந்து கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

ஜூபா நகரில் மக்கள் தெருக்களுக்கு வந்து கரகோஷம் எழுப்பி மகிழ்ச்சியை பகிர்ந்து வருகின்றனர். தெற்கு சூடான் தனி நாடாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் போது ஐ.நா.வின் 197 ஆவது உறுப்பு நாடாக தெற்கு சூடானும் இதன் தலைநகராக ஜூபாவும் உருவெடுக்கும். (ஸ்ரீ-2)



துனிசியா தலைநகர் துனிசில் நடந்த முதல் கலந்தாய்வுக் கூட்டத்தில் அந்நாட்டு இடைக்கால ஜனாதிபதி போவ்ட் மெபாஜா (வலது) மற்றும் அந்நாட்டு பிரதமர் முகமது கனோவ்சி கலந்து கொண்டனர்.

# மகரஜோதி இயற்கையாக ஏற்படுவதா? மனிதர்களால் உருவாக்கப்படுவதா?

## தெளிவுபடுத்துமாறு கேரள உயர்நீதிமன்றம் பணிப்புரை

சபரிமலையில் இலட்சக்கணக்கான பக்தர்கள் காணத்துடிக்கும் மகரஜோதி இயற்கையாக ஏற்படுவதா அல்லது மனிதர்களால் உருவாக்கப்படுவதா என்பதைத் தெளிவுபடுத்துமாறு ஐயப்பன் கோவிலை நிர்வகிக்கும் திருவாங்கூர் தேவஸ்தான வாரியத்தை கேரள உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.

சபரிமலையில் கடந்த 14 ஆம் திகதி 102 பேர் உயிரிழக்க காரணமாக இருந்த நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் இவ்வாறு கோரியுள்ளனர்.

தேவஸ்தானம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் டி.ஜி.பரனேஸ்வர் நாயர் இது குறித்து பதிலளிக்கும் போது, மகரஜோதி என்பது குறிப்பிட்ட அந்த நேரத்தில் வானில் தோன்றும் நட்சத்திரத்தையும் உள்ளடக்கியது என்றும் அது தெய்வசக்தியால் உருவாகிறது என்று நம்பப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதேசமயம், அது தெய்வ அருளால் ஏற்படுவது என்று தேவஸ்தானம் எந்த விளம்பரமும் செய்யவில்லை என்றும் அவர் வாதாடினார். எது உண்மை என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்றும்,அதனால் அதைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் என்றும் நீதிபதிகள் அப்போது உத்தரவிட்டார்கள்.

சபரிமலை தேவஸ்தானம் சார்பில் பேசவல்ல ராகுல் ஈஸ்வர் கருத்துத் தெரிவிக்கும் போது , பொன்னம்பல மேட்டில் உருவாகும் ஜோதி, மனிதர்களால் ஏற்படுவது என்றும், அதேநேரத்தில், சூரியன், தனுசு இராசியில் இருந்து மகர ராசிக்கு மாறும்போது உருவாகும் ஒளிபடைத்த நட்சத்திரம் தான் மகர ஜோதி என்றும் கூறியுள்ளார்.

கடந்த வாரம் நடந்த நெரிசலால் ஏற்பட்ட உயிரிழப்புக்களைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படத் தவறிவிட்டதாக கேரள அரசு மீது உயர்நீதிமன்ற நீதிபதிகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

விபத்து நடந்த புல்மேடு பகுதியில் பாதுகாப்பு வழங்க இயலாது என்ற நிலையில், அங்கு யாரையும் அனுமதித் திருக்கக் கூடாது. பக்தர்களை அனுதிக்கும் பட்சத்தில், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

ஐயப்பன் கோயில் அமைந்துள்ள சபரிமலையில் ஆண்டுதோறும் மகரவிளக்கு நிகழ்வின்போது இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவது வழக்கம். அந்த மலைப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளைக் கொண்டது.மகரஜோதியைக் காண, சபரிமலை கோயில் பகுதிகள் மட்டுமன்றி, அதைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகள் மற்றும் வனப் பகுதிகளிலும் இலட்சக்கணக்கில் பக்தர்கள் கூடுவது வழக்கம். மலை உச்சியில் தோன்றும் ஜோதி, ஐயப்பன் ஜோதி வடிவில் தரிசனம் தருவதாக பக்தர்களிடம் நம்பிக்கை உள்ளது.


அவ்வாறு,இந்த ஆண்டு இடுக்கி மாவட்டம் புல்மேடு வனப்பகுதியில் சுமார் இரண்டு இலட்சம் பக்தர்கள் கூடி மகர ஜோதியைக் கண்டார்கள். அது நிறை வடைந்ததும் கீழே இறங்கும்போது ஏற்பட்ட நெரிசலில் 102 பேர் உயிரிழந்துவிட்டார்கள்.

அந்த சம்பவம் தொடர்பாக, அறிக்கை அளிக்குமாறு கேரள மாநில பொலிஸாருக்கும் வனத்துறைக்கும், சபரிமலை கோயிலை நிர்வகிக்கும் திருவாங்கூர் தேவஸ்தான வாரியத்துக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி, அந்த மூன்று அமைப்புக்கள் சார்பிலும் நேற்று முன்தினம் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மாநில பொலிஸ் தலைவர் சேகப் புன்னூஸ் தாக்கல் செய்த மனுவில், புல்மேடு பகுதியில் பாதுகாப்புப் பணிக்காக 279 பொலிஸார், இரண்டு துணைக் கண் காணிப்பாளர்கள் உள்ளிட்ட உயர் அதி காரிகளும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகக் கூறியுள்ளார்.

மேலும், வனத்துறை சார்பில், அந்தப் பகுதிக்குச் செல்ல ஆயிரத்து 400 மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.




திருவாங்கூர் தேவஸ்தான வாரியத் தலைவர் வாசு தாக்கல் செய்துள்ள மனுவில், புல்மேடு பகுதியில் செல்லும் ஐயப்ப பக்தர்களை முறைப்படுத்த போதிய அளவு பொலிஸ் மற்றும் வனத்துறையினர் பணியமர்த்தப்படவில்லை என்று குறிப் பிட்டுள்ளார்.

அந்த மனுக்களைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம், பல்வேறு துறைகளுக்கு இடையே தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இல்லாததே இவ்வாறு பெரிய விபத்துக்குக் காரணமாகிவிட்டது என்று கருத்துத் தெரிவித்தது. (ஸ்ரீ-2)

# மகரஜோதி குறித்து ஆராயும் உத்தேசமில்லை

## கேரள மாநில முதல்வர் தெரிவிப்பு



சபரி மலை மகரஜோதி மனிதர்களால் உருவாக்கப்பட்டதா, இல்லையா என்பது குறித்து ஆராய உத்தேசமில்லை என கேரள மாநில முதல்வர் அச்சுதானந்தன் உறுதிபடத் தெரிவித்தார்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில், ஆண்டுதோறும் தைமாதம் முதல் திகதி மகரஜோதி தரிசனம் நடைபெறும். இவ்வாண்டு தரிசனம் முடிந்து திரும்பியவர்களில் 106 பேர், புல்மேடு பகுதியில் நெரிசலில் சிக்கிப் பலியாகினர். இது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.இந்நிலையில், சபரிமலை எதிரே பொன்னம்பலமேட்டில் பக்தர்களுக்கு தெரியும் மகரஜோதி மனிதர்களால் ஏற்றப்படுவது என்றும், அதுகுறித்து வல்லுநர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி, அங்கு நடப்பது குறித்து தெரிவிக்க வேண்டும் என கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதுகுறித்து கேரள மாநில உயர்நீதிமன்றம் மகர ஜோதி மனிதர்களால் ஏற்றப்படுகிறதா, இல்லையா என்பது குறித்து, மாநில அரசு விளக்கமாக தெரிவிக்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

நேற்றுமுன்தினம் காலை, திருவனந்தபுரத்தில் அமைச்சரவை கூட்டத்திற்கு பின், பத்திரிகையாளர்களை சந்தித்த முதல்வர் வி.எஸ். அச்சுதானந்தன் கூறியதாவது,

சபரிமலை மகரஜோதி என்பது மனிதர்களால் ஏற்றப்படுகிறதா என்பது குறித்தெல்லாம் ஆராய உத்தேசிக்கவில்லை. அது சபரிமலை குறித்த பக்தர்களின் நம்பிக்கையின் ஒரு பாகமாக தான் கருதுகிறேன். மகர ஜோதி எவ்வாறு ஏற்படுகிறது என்பது குறித்து, அதிநவீன தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டோ அல்லது ஆன்மீகவாதிகளைக் கொண்டோ ஆராயவும் உத்தேசமில்லை. புல்மேடு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க, தனி குழு நியமிக்கப் பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் எதிர் காலத்தில் நேராவண்ணம் தடுக்கவும், பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கூட்டம் விரைவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அச்சுதானந்தன் கூறினார்.(ஸ்ரீ)




# தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக பிரசாரமா?

## நடிகர் விஜய் பரபரப்புப் பேட்டி

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வீர்களா? என்ற கேள்விக்கு நடிகர் விஜய் பதில் அளித்தார்.

நடிகர் விஜய், சென்னை துறைமுகத்தில் நடந்த வேலாயுதம் படப்பிடிப்பில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

காவலன் படத்தை ரிலீஸ் செய்வதற்குள் நிறைய பிரச்சினைகளை சந்திக்க வேண்டியதாகி விட்டது. இதற்கு முன்பும் சில படங்களில் பிரச்சினைகள் வந்தது உண்டு. பொருளாதார ரீதியாக பல படங்களுக்கு உதவி செய்து இருக்கிறேன். பணம் பெரிய பிரச்சினையே அல்ல. காவலன் படத்தில் சில மோசமான பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருந் தது. அந்த பிரச்சினைகளுக்கு காரணம் யார்,அது எங்கிருந்து வருகிறது,யார் தூண்டி விடுகிறார்கள்? என்று எனக்கு தெரியவில்லை. புது அனுபவமாக இருந்தது. பிரச்சினைக்கு காரணம் தெரியவில்லை. இன்றுவரை அது புரியவில்லை.

பிரச்சினைகள் காரணமாக காவலன் படத்தை கடந்த 14 ஆம் திகதி கொண்டுவர முடியவில்லை. என்றாலும் அந்த பிரச்சினைகளை எல்லாம் தாண்டி காவலன் படத்துக்கு மக்கள் வரவேற்பு கொடுத்து இருக்கிறார்கள். தமிழ்நாடு முழு வதும் 350 தியேட்டர் களில் படம் ஓடிக் கொண்டிருக்கிறது.

கஷ்டமான சூழ் நிலையில் என் கூட இருந்து உதவி செய் தவர்களுக்கும் ரசிகர்களுக்கும் நன்றி. இவ்வாறு விஜய் கூறினார்.

பின்னர் அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு விஜய் அளித்த பதில்களும் வருமாறு :--

**கேள்வி:-** **உங்கள் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரன், ஜெயலலிதாவை சந்தித்து பேசியபின், அரசியலில் உங்களை சம்பந்தப்படுத்தி பரபரப்பான தகவல்கள் பேசப் படுகிறதே?**

பதில் :- ஜெயலலிதா அம்மாவை சந்திப்பதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. சந்தித்தோம். அது எல்லோருக்கும் கிடைக்காது. இதற்கு முன்பு ராகுல் காந்தியை நான் சந்தித்ததும் இதுபோல்தான் அமைந்தது.

**கேள்வி:-** **வரப்போகிற தேர்தலில் நீங்கள் அரசியலில் ஈடுபடப்போவதாக பேச்சு அடிபடுகிறதே?**

பதில்:- அதற்கு இது சரியான நேரம் அல்ல. ஒரு நடிகராக நான் மக்களுக்கு அறிமுகமானேன். இவ்வளவு பெரிய வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

**கேள்வி:-** **காவலன் படத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள், உங்களை அரசியலில் ஈடுபடும் படி தூண்டுவதாக கருதுகிறீர்களா?**

பதில்:- அந்த பிரச்சினைகளுக்கும், அரசியலுக்கும் முடிச்சு போட வேண்டாம்.

**கேள்வி:-** **விஜய் அ.தி.மு.க.கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்வாரா? என்று ஜெயலலிதாவிடம் கேட்டதற்குத அதை அவரிடம்தான் கேட்க வேண்டும் என்று ஜெயலலிதா பதில் அளித்து இருக்கிறாரே.... வருகிற தேர்தலில் அவருக்கு ஆதரவாக நீங்கள் பிரசாரம் செய்வீர்களா?**

பதில்:- அதுபற்றி நான் இன்னும் முடிவு செய்யவில்லை.




**கேள்வி:-** **3 இடியட்ஸ் படத்தில் நீங்கள் ஏன் நடிக்கவில்லை?**

பதில் :- ஒரே நேரத்தில் வேலாயுதம், 3 இடியட்ஸ் ஆகிய இரண்டு படங்களில் நடிக்க முடியவில்லை என்பது தான் உண்மை. வெளியே பல காரணங்களை பேசிக்கொள் கிறார்கள். அதெல்லாம் உண்மை இல்லை. எனக்கு யாருடனும் எந்த பிரச்சினையும் கிடையாது.

**கேள்வி:-** **வேலாயுதம் படம் எந்த அளவில் உள்ளது?**

பதில்:- தயாரிப்பாளர் ஓஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன், டைரக்டர் ஜெயம் ராஜா ஆகியோரின் ஒத்துழைப்புடன் படம் 50 சதவீதம் வளர்ந்து இருக்கிறது. இனிமேல் வருடத்துக்கு ஒரு சண்டை படத்திலும், கதைக்கும் கதாபாத்திரத்துக்கும் முக்கியத்துவம் உள்ள படத்திலும் நடிக்க திட்டமிட்டு இருக்கிறேன். மேற்கண்டவாறு விஜய் பதில் அளித்தார். (ஸ்ரீ-2)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நற்பணியை நெஞ்சம் மறப்பதில்லை



சுவாமி ஞானப்பிரகாசர் மானிப்பாயில் பிள்ளை யார் கோயில் முகாமையாளரான இராசலிங்கம் சாமிநாதப்பிள்ளைக்கும் அன்னம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இள வயதுப் பெயர் வைத்திலிங்கம்.

இவரது தந்தை இவர் சிறுவனாகவிருந்த போதே இறந்துவிட்டதால், பிற்காலத்தில் சிறிய தந்தையால் வழிநடத்தப்பட்டார். இத னால் இவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ நேரிட்டதுடன் இவரது பெயரும் ஞானப்பிர காசர் என மாற்றம் பெற்றது.

இவருக்குக் கல்வி ஊட்டியது யாழ். புனித பத்திரிசியார் கல்விக்கூடம். இவர் தமது படிப்பை முடித்த பின்னர் பெருந்தோட்டமொன்றில் கணக்காளராகப் பதவியேற்றார். ஓய்வான நேரங்களில் இலங்கைப் புகையிரதப் பகுதி எழுதுவினைஞர் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து பரீட்சையில் தகுதிக் கிரமத்தின்படி முதலிடத் தைப் பெற்றதுமன்றிக் கொழும்புத் தலைமைப் புகையிரதத் திணைக்களத்தில் சிறிது காலம் சீரும் சிறப்புமாகப் பணிபுரிந்தார்.

ஞானப்பிரகாசருக்குக் கிறிஸ்துவின் ஒளி யின் வழியில் வந்த சார்ள்ஸ் கொலின் அ.ம.தி. அடிகளின் ஒரேயொரு அமுதமொழி யான "நீர் இறைவனுக்குத் தொண்டு செய்ய விரும்பினால் ஏன் உலகத்தைத் துறந்து குருமடத்தைச் சேரக்கூடாது?". என்பதே இவர் புகழ்பூத்த உத்தம குருவாகத் திகழ்வதற்கு வழிசமைத்தது.

புனித சின்னப்பரின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எப்படிக் கொடூரவாதியாகத் திகழ்ந்த சவுலை "நீ துன்புறுத்தும் கிறிஸ்து" என்ற இனிய குரல் பவுலடியனாக (சின்னப்பராக) மாற்றி கத்தோலிக்கத் திருமறையில் புனித இராயப்பர் போன்று முக்கியமானவராக்கியதோ; அதுபோன்று ஈழ வளநாட்டில் ஒரு புதிய சின்னப்பராக மாறும் உன்னத நிலைக்கு வந்த ஞானப்பிரகாசர் 01.12.1901இல் இயேசுவின் கருணையால் குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார்.

**கன்னித் தமிழுக்கும் கத்தோலிக்கத் திரு மறைக்கும் மகத்துவமான பணிபுரிந்த சேவைச் செம்மல்; தியாகப் பணியினால் ஈழநாட்டில் உயர்வு பெற்ற பேரறிஞர்; அகிலத்தில் தனக் கெனத் தனியிடம் பிடித்தவர் சுவாமி ஞானப் பிரகாசர். இவர் இறைவனடி சேர்ந்து அறுபத்து நான்கு வருடங்கள் கழிந்தாலும் பெருமானின் சேவை மங்காமல் மறையாமல் ஒளி வீசும் மாணிக்கமாகத் திகழ்கிறது.**

இவர் தலைசிறந்த போதகராகவும் உன் னத நூல்களை இயற்றிய மாபெரும் எழுத்தா ளனாகவும் பன்மொழி மாமேதையாகவும் புகழ்பூத்த வரலாற்று ஆசிரியனாகவும் இறுதி மூச்சு வரையும் கடினமாக உழைத்த மறைப் பணியாளராகவும் திகழ்ந்தார்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்குக் கன்னித் தமிழும் கத்தோலிக்கத் திருமறையும் இரு கண்களாகத் திகழ்ந்தன. இவர் மாபெரும் மறைப் பணியாற்றினார்; ஆனால் இவர் இறுதி மூச்சு வரையும் இன்பத் தமிழைத் துறக்க வில்லை. அன்னை மொழி மேல் அதீத பற்றுக்கொண்டு அருந்தொண்டு புரிந்தார்.

"இறைவன் என்னை நன்றாகப் படைத்த னன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற திருமூலரின் திருவாக்குக்கு இலக்கண மாக இவர் விளங்கினார். தமிழுக்குச் செய்த தன்னிகரில்லாத தனிப்பணி சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி. இது காலத்தால் அழியாதது. தமிழே உலகத் தாய்மொழி என்று கடினமாக உழைத்த மாமேதை. இவரின் நற்பணிகள் இவரின் சீடரான தும்பளை கலாநிதி தாவீது அடிகளால் தொடர்ந்தும் பேணப்பட்டன.

பல்கலைக் கழகம் செல்ல வாய்ப்பு வசதி குறைந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் இறை வன், அடிகளுக்கு அளித்த தனிப்பெரும் ஆற்றலை நன்கு பயன்படுத்தி, அயராது கடினமாக உழைத்து பன்மொழிப் புலவராய் பல நூல்களைச் சமைத்துப் பாரெங்கும் புகழ்பூத்தவராக மறைப்பணியும் தமிழ்ப் பணியும் புரிந்தார். வடமொழி, தமிழ், ஆங்கிலம், இலத்தீன் ஆகிய நான்கு மொழிகளையும் கற்றறிந்ததோடு எழுபது மொழிகளை அறிந்திருந்தார்.

கத்தோலிக்கக் குருவாகக் கடமையாற்றிய இவர், தமிழ் மொழியின் பெருமையை ஈழத்திலும் பாரத நாட்டிலும் பரப்பியது மட்டு மன்றி ஆங்கில நாடு, ஜேர்மனி முதலிய மேல்நாடுகளிலும் பரப்பினார். இவர் தமிழ் மொழி ஆராய்ச்சி யிலே காலத் தைக் கழித் தார். சமஸ் கிருதம், பாளி, சிங் களம், தெலு ங்கு, கன் னடம், மலை யாளம், இந்தி, போர்த்துக் கேயம், ஆங்கிலம், இலத்தீன், ஜேர்மனி முதலிய பல மொழிகளைக் கற்று அவற்றோடு சுவை பயக்கும் செந்தமிழை ஒப்பிட்டு ஆராய்ந் தார். இவ்வாறு செய்த மொழி ஆராய்ச்சியின் பயனாக அ,இ,உ,எ என்னும் நான்கு எழுத் துக்களை அடிப்படையாகக் கொண்டே தமிழி லுள்ள எல்லாச் சொற்களும் பிறந்தன என்ப தையும் உலகிலுள்ள ஏனைய மொழிகளுள் தமிழ்மொழியே காலத்தால் முந்தியது என்ப தையும் மேல்நாட்டுப் பத்திரிகை கள் வழியாக உலகுக்கு எடுத்துக்காட்டினார்.

தமிழ்ச் சொற்களின் தோற்றத்தை ஆராய் ந்து "தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி" என்னும் அரிய நூலையும் எழுதினார். தமிழ்மொழியின் பெருமையை உலக அரங்கில் முழங்கச் செய்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் என்று கூறலாம் என இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ஆ.சதாசிவம் குறிப் பிடுவது பொருத்தமானதே.

22.05.1981இல் அறிவுக் கடலாகிய அடி களின் பெருமையை உணர்ந்து இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌர வித்தது. அந்நேரம் அமுதகவிப்புலவர் யாழ் ஜெயம் தன் கவிதையில் குறிப்பிட்டிருந்தது வருமாறு,

**"அன்றறிஞர் செருமனியோர் அகழ்ந்தி ழைத்த வைரமணி**

**இன்றீழ முத்திரைக்கண் இலங்கி யொளி காலுகின்றார்**

**காலமாய் விட்டார் என்றுரைத்தல் கற்பனையே**

**காலமதாய் மாறிவிட்டார் என்பதுதான் பேருண்மை"**

1947.01.22ல் இவர் இறைபதம் அடைந்த வேளை ஈழகேசரிப் பத்திரிகை நடுநிலை தவறாது நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசரின் பணியை மதிப்பீடு செய்த புகழாரம் பேறறிஞர் களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சில வரிக ளைக் கோடிட்டுக் காட்டுவது "தொன்மை மறவேல்" என்பதற்குச் சான்றாகும்.

துரை ஆரோக்கியதாசன் B.A, P.G.D.E
முன்னாள் பிரதி அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

...ஹெரஸ் சுவாமிகள் ஈழம் வந்தார். அடிக ளின் முக்கியமான நோக்கம் ஞானப் பிரகாசரைக் கண்டு உரையாடிப் புதை பொருள் ஆராய்ச்சி சம்பந்தமான சில சந்தே கங்களை நிவர்த்திப்பதே. அவர் ஞானப் பிர காசர் அடிகளின் மொழி ஆராய்ச்சித் திறனை யும் புலமை யினையும் கண்டு பன் மடங்கு வியந்தார். பழைய ஏடுகள், சரித்திரக் குறிப்புக் கள் என்ப னவே அவரின் செல்வம். இவரின் உத்தம தியாகத் தொண்டுடன் தமிழியற்பணிகள் - தமிழ்ப் பணி, வரலாற்றுப் பணி, சமயப் பணி ஆகியவை மகத்தானவை. தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நன்றிப் பெருக்குடன் நல்லூர்ச் சுவாமி ஞானப்பிர காசரைக் கால மெல்லாம் நினைவுகூரத்தக்கவை.

# இன்னும் 2 வருடங்களில் யாழிற்கு "லக்ஷபான" மின்சாரம் கிடைக்கும்

## இ.மி.சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் உறுதி



"வடமாகாணம் துரித வளர்ச்சிய டைந்து வருவதால் போதுமான அளவு நிறைவான சேவை வழங்குவதே தமது நோக்கம்" என இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் வி.கே.பி.எஸ்.குணதிலக தெரிவித்தார். இலங்கை மின்சாரசபையின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகு திக்கு லக்ஷபான மின்சாரம் வழங்குவதற் கான திருத்தவேலைகளை மேற்கொண்டு ஜப்பானின் ஜெமிக்ஸ் வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து 7 மில்லி யன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளன. இத்திருத்தவேலைகளை மேற்கொண்டு வவுனியாவிலிருந்து கிளிநொச் சிக்கும் கிளிநொச்சியிலிருந்து சுன்னாகத் திற்கும் மின்மாற்றிகளை நிறுவுவதன் மூலம் வடபகுதிக்கு சீரான மின்சாரத்தை வழங்க முடியும்.

தற்போது இதன் முதற்கட்டமாக திருத்த வேலைகள் வவுனியாவில் ஆரம்பமாகியுள் ளதென்றும் எதிர்வரும் 2012ஆம் ஆண்டின் இறுதிக்குள் கிளிநொச்சிக்கு லக்ஷபான மின்சாரம் கிடைக்கக்கூடியவாறு வேலைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது,

கிளிநொச்சிக்கு லக்ஷபான மின்சாரம் கிடைத்ததும் அதன் அடுத்த கட்டமாக கிளிநொச் சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான லக்ஷ பான மின்வழங்கலுக்கான திருத்த வேலை கள் ஆரம்பிக்கப்படும். இது பெரும்பாலும் எதிர்வரும் 2013ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பமாகி ஒரு வருட காலத்தில் யாழ்ப் பாணத்திற்கு லக்ஷபான மின் வழங்க முடி யும்.

அடுத்து கிராமங்களுக்கு மின் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கு ஆறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள் ளதுடன் அமைச்சரவை அனுமதி கிடைத்த தும் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு முடிவ தற்கு முன்னர் கிராமங்களுக்கு மின் வழங் கும் பணிகள் பூர்த்தியாகும். வட பகுதியில் 1/3 பகுதி இதுவரை பூர்த்திய டைந்துள்ள துடன் இத்திட்டத்தின் மூலம் கிராமங்களுக்கு 100வீதம் மின்சாரம் வழங்குவதே எமது நோக்கமாகும்.

யுத்தத்திற்கு முன்னர் மின் வழங்கப்பட்டு யுத்தத்தால் வீடுகள் சேதமடைந்து இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அந்தந்த பகுதி கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் உறுதிப்படுத்தலுடன் இலவசமாக மின்னிணைப்பு வேலைகளை கொடுக்க எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்து தமது சொந்த இடங் களுக்கு திரும்பிய அனைத்து மக்களுக்கும் மின் வழங்கல் கிடைக்கப்பெற வேண்டும் என்பதே தமது பெருவிருப்பாகும் என்றார். யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மின்சார சபைக்கு நிரந்தரக் கட்டடம் எதுவும் இல்லை என்றும் நவீன வசதிகளுடன் நிரந்தர கட்டடம் அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அரச அதிபருடன் இதுபற்றிக் கலந்துரையாடியுள் ளதாகவும் இதுவிடயத்தில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆர்வமாக உள்ளார் என்றும் குறிப்பிட்ட அவர் நுகர் வோர் பாவனையாளர் சேவை நிலையங்க ளையும் சகல வசதிகளுடன் அமைக்க உத்தேசித் துள்ளதாகவும் அவர்கூறினார்.

தற்போது மின் வழங்கலை மேற்கொள் ளும் நொதேன் பவர், அக்றிக்கோ ஆகிய நிறுவனங்களின் பணிகள் தொடர்பாக ஆராய அமைச்சிலிருந்து குழுவொன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி யாழ். வருகிறது என்றும் அவர்கள் இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப் பார்கள் எனவும் குறிப்பிட்டார். கிளிநொச்சி கிறிட் இயங்க ஆரம்பித்தால் நொதேன் பவர் நிறுவனத்திடமிருந்து பெரிய அளவில் மின்னை எதிர்பார்க்கவேண்டியிருக்காது எனவும் நுரைச்சோலை மின் வேலைகளும் நடைபெற்று வருவதால் விரைவில் மின் வழங்கல் நெருக்கடியை சீர்செய்யமுடியும் என்றார்.

மின்கட்டணத்தில் குறைப்போ அல்லது பெரிய அளவில் மாற்றம் ஏற்படுவதற்கோ வாய்ப்புக்கள் இல்லையென்றும் கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம் பெயர்ந்த வர்களுக்கும் யாழ்ப்பாணம் குறிப் பாக இடம்பெயர்வால் பாதிக்கப்பட்டவர்க ளுக்கும் மாத்திரம் ஒரு வருட காலத்திற்கு இலவசமாக மின் வழங்கலை மேற்கொள் ளவுள்ளதாக வும் கூறினார்.

மின்பாவனை யாளர்களுக்கு பூரண மான சேவையை வழங்குவதுதான் தமது நோக்கும் என்று கூறிய அவரிடம் யாழ்.மக் களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் என வினவிய போது, வட மாகாணம் துரித மாக வளர்ச்சி அடைந்து வருவதால் தம்மால் போதுமான அளவு நிறைவான சேவையை வழங்க முடியும் என்பதே தனது எதிர்பார்ப் பாகும் என்று அவர் மேலும் தெரிவித் தார். (ஸ்ரீ-2)

மனசாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது.

-ஜேம்ஸ் க்ளார்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நடப்பதோ ஜனநாயகத் தேர்தல் வேட்பாளர்களோ ஆளைவிடு என்கிறார்கள்

உள்ளூராட்சித் தேர்தல் அறிவித்தல் வெளியான கையோடு வேட்பாளர்களை தேடும் பணியில் அரசியல் கட்சிகள் களமிறங்கியுள்ளன.

எனினும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் வடபகுதியில் தமிழ் அரசியல் கட்சிகள் படாப்பாடுபடுவதைக் காண முடிகின்றது.

யுத்தம் முடிந்து விட்டது. எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதில் தமக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்று முன்கூட்டியே உத்தரவாதம் வழங்கியவர்களும் இப்போது பின்னடிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்ற அசம்பாவிதங்களால் ஐயா! இம்முறை வேண்டாம்! அடுத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யோசிக்கலாம் என்று அவர்கள் கூறுவதாக தமிழ் அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவிப்பது ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட பழுதென்றே கூற வேண்டும்.

அமைதி நிலை ஏற்படாவிட்டால், மக்கள் பொது விடயங்களில் ஈடுபட மறுப்பர். தாமும் தம்பாடும் என்று இருப்பதைவிட, வேறு எதுவும் எமக்கு பாதுகாப்பாகாது என்ற நினைப்பு நியாயமானதென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதேநேரம் சுதந்திரமாக தேர்தலில் போட்டியிட முடியாதபோது தேர்தல் என்பது கடமைக்குச் செய்வதாகவே நடந்து முடியும்.

இத்தகையதோர் அபத்தமான நிலைமை கடந்த யுத்த காலத்தில் இருந்தது.

இதனால் தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணித்தனர். அதிலும் படித்தவர்கள் என்று பட்டியல் படுத்தக் கூடியவர்களே தேர்தலை புறக்கணிப்பதில் பெரும் பங்காற்றினர் எனலாம்.

இப்போது கூட தேர்தல்–வாக்களிப்பு இவையெல்லாம் நமக்குத் தேவையற்றவை என்ற நினைப்பு எண்பது வீதமான வட பகுதி தமிழ்மக்களிடம் உள்ளது.

இதிலிருந்து மக்கள் மாறாத வரையில் தேர்தல் முடிவுகள் எந்தப் பயனுமற்றவை என்றே கூற வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட வடபகுதியில் இருபது வீதமான தமிழ் மக்களே வாக்களித்துள்ளனர்.

ஒரு காலத்தில் தேர்தல் என்றால் மூலை முடுக்கெங்கிலும் பிரசாரம் செய்த வடபுலத்து மண்ணில் இருபது வீதமான வாக்களிப்பை மட்டுமே எதிர்பார்க்க முடிகின்றதெனில் நிலைமை எங்கோ சென்று விட்டதென்பது உறுதியாகின்றது.

இதற்கு தனித்து நாட்டின் அமைதி நிலை மட்டும் காரணமல்ல. மாறாக சமகாலத்து நாடாளுமன்றம் கூட வெறுப்பற்ற பீடமாக மாறிவருகிறது. எதிர்க்கட்சிகள் குறை குற்றங்களை எடுத்துக் கூறினால் அதற்கு ஆரோக்கியமான பதிலளிக்கும் பண்பாடு மருவி கிரந்தப் பதில்கள் கூறும் இடமாகிவிட்டது. நிலைமை இதுவாக இருக்கும் போது மக்கள் தேர்தலில் எங்ஙனம் நம்பிக்கை வைப்பது?

# யாழ். மக்களின் பொருளாதாரத்திற்கு இந்தியன் வங்கி உதவி வழங்கும்

## அதன் தலைவர் ரி.எம்.பாசின் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியன் வங்கி தனது 104 ஆண்டுகள் அனுபவத்தினைக்கொண்டு கிராமப் புறமேம்பாடு மற்றும் சிறு தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் யாழ்ப்பாண மக்களில் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும். இவ்வாறு இந்தியன் வங்கியின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ரி.எம்.பாசின் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் இலங்கைக்கான இரண்டாவது கிளை நேற்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்புவிழாவில் தலைமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் இந்தியன் வங்கியின் தலைவர் ரி.எம்.பாசின் தனது உரையில்,

இந்தியாவின் பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான இந்தியன் வங்கியின் கொழும்புக்கிளை 1947ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இரண்டாவது கிளை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படுகின்றது.

இதன் மூலம் இந்தியன் வங்கியின் சர்வதேசக்கிளைகள் சிங்கப்பூர், கொழும்பு, யாழ்ப்பாணம் என மூன்று கிளைகளாகி விட்டன.

இலங்கையின் வடபகுதியில் இந்திய–இலங்கை அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார வளர்ச்சிப் பணிகளில் நாமும் பங்காற்றுவோம்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவிய சுய உதவிக் குழுக்கள் மற்றும் வங்கிச் சேவை திட்டம் என்பன யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்கும் இந்தியன் வங்கியினால் செயற்படுத்தப்படும்.

இந்தியன் வங்கி இந்தியாவில் மூன்று இலட்சத்து 96 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் மூலம் இலங்கை ரூபாயில் 50.47 பில்லியன் கடன் நிலுவையில் உள்ளது.

இந்தியாவில் இந்தியன் வங்கி ஆயிரத்து 822 கிளைகளையும் ஆயிரத்து 87 தன்னியக்க காசு பரிமாற்ற இயந்திரங்களையும் தன்னகத்தே கொண்டு 23 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது.

இந்தியன் வங்கி கிராமப்புற மேம்பாடு மற்றும் சிறு தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் பெற்ற தனது 104 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்டு யாழ்ப்பாணமக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் என அதன் தலைவர் ரி.எம்.பாசின் தெரிவித்தார். (ந–5)

# இந்தியாவின் உதவியுடன் வடக்கில் வீடு; பாதை; துறைமுகம் அமைப்பு

## இந்திய உயர்ஸ்தானிகர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையினூடாக பல நுண் நிதிவழங்கல்களை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் மீன்பிடி, உள்ளிட்ட துறைகளை மேம்படுத்த முடியும். இவ்வாறு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக்கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்ட உயர்ஸ்தானிகர் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் இந்தியாவினால் 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. அத்துடன் மதவாச்சி–தலைமன்னார், தாண்டிக் குளம்–பளை வரையான புகையிரதப் பாதை அமைக்குப் பணிகள் இந்தியாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறைமுக புனரமைப்பு பணிகளையும் இந்தியா மேற்கொள்கிறது என்றார். (ந–5)

## கல்விமாணி விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்று வரும் தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி விரிவுரைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது எனவும் அடுத்த விரிவுரைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ–9)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதியின் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் சாமணந்துறை ஆலடிப் பிள்ளையார் கோயில் வற்றாப்பளை மகாவித்தியாலய அதிபர் சி.ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்விச் சமூகவியல் எனும் நூல் அறிமுகம் செய்யப்படவுள்ளதுடன் நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ–9)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிபுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படும் எனவும் இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மனிதன் ஒரு பிரமாண்டமான வட்டம். அதன் சுற்றுப் பரப்பிற்கு எல்லையில்லை. ஆனால் அதன் மையமோ ஒரு சிறு புள்ளியில் அமைந்திருக்கிறது. கடவுள் எல்லையற்ற சுற்றுப் பரப்பு. ஆனால் அவருடைய மையப் புள்ளி எங்கும் எல்லாவிடத்திலும் இருக்கிறது. அது இல்லாத இடமே இல்லை.

மனிதனிடம் இமாலயப் படிப்பறிவு இருக்கலாம். ஆனால் ஆன்மீகத்தைப் பொறுத்தமட்டில் அவன் சிறு குழந்தையாக இருப்பான். சமயம், அதன் சித்தாந்தங்களில் இல்லை. கோட்பாடுகளிலும்,தர்க்க வாதங்களிலும் இல்லை. மக்களிடம் அடங்கிக் கிடக்கும் தெய்வீகத்தை உணர்வதும், அதை வெளிக் கொணர்வதும் தான் சமயம். அனுபூதியே சமயம்.

தீயோர்களுக்கு உலகம் தீய நரகமாகத் தெரிகிறது. நல்லோர்களுக்கு சுவர்க்கமாக தெரிகிறது. அருளாளர்களுக்கு அருள்வடிவமாகத் தெரிகிறது. பகை உணர்ச்சி உடையவர்களுக்கு வெறுப்பு மயமாகத் தெரிகிறது. சண்டை சச்சரவு இடுவோர்களுக்குப் போர்க்களமாகத் தெரிகிறது. அமைதியாளர்களுக்கு அமைதிக் களஞ்சியமாகத் தெரிகிறது. முழுமையுற்ற மனிதனுக்கு எல்லாமே தெய்வமாகத் தெரிகிறது. அனைத்தையும் தெய்வமாகக் காண்கிறான்.



யாழ்.போதனா வைத்தியசாலையில் ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்படவுள்ள 3மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுக் காலை நடைபெற்றது.இதில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவை வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா வரவேற்பதையும்,சுகாதார அமைச்சர்,இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர்,வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்வதையும்,சுகாதார அமைச்சர் பணிகளை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# 5 ஆண்டில் யாழ்.போதனா வைத்தியசாலை முதற்தர வைத்தியசாலையாகத் திகழும்

## மூன்று மாடிக்கு அடிக்கல் நாட்டிய சுகாதார அமைச்சர் உரை



(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் தற்போது யாழ்ப்பாணத்திற்கே வழங்கப்படுகிறது. ஆகையால் இன்னும் 5 வருடங்களில் யாழ். போதனா வைத்தியசாலையை முதற்தர வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யமுடியும்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜப்பான் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள மூன்று மாடி கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு சுகாதார அமைச்சர் தனது உரையில், ஒரு வருடத்திற்கு முன்பு கமநல சேவைகள் அமைச்சராக நான் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது என்னைச் சுற்றி ஆயுதப்படைகளே குழுமியிருந்தன. ஆனால், இன்று அவ்வாறானதொரு நிலையில்லாமல் உங்களுடன் இணைந்து இருக்கிறேன். இன்னும் இரண்டு வருடங்களில் தனிமையாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரமுடியுமென நம்புகிறேன்.

அப்போது தான் யாழ்ப்பாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்ய முடியும். இன்று போதனா வைத்தியாசாலையில் புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்.போதனா வைத்தியசாலையினுள் சுற்றிப்பார்த்த போதுதான் பல வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகள், உபகரணங்கள் கிடைத்துள்ளமையை காண முடிந்தது.

மேலும் இவ் வைத்தியசாலைக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறுவதற்கு உதவுவோம். இதன் மூலம் இன்னும் 5 வருடங்களில் யாழ்.போதனா வைத்தியசாலை முழுமையான அபிவிருத்தியடைந்து முதற்தர வைத்தியசாலையாக திகழும்.

யுத்தத்தை முடிபுக்கு கொண்டுவர நீண்ட காலம் தேவைப்பட்டது. அதே போன்று தான் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் நீண்டகாலம் எடுக்கும்.

வடபகுதி இளைஞர்கள் ஆயுதங்களை தாங்கியிருந்தனர். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று பேனாவும் புத்தகமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே உங்களிடம் பேனாவும் புத்தகமும் இருப்பதனால் தான் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

ஜப்பான் எமக்குத் தேவையானவற்றிற்கு எப்போதும் உதவும். ஜப்பான் அரசுக்கும் மக்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

கட்டடங்கள், தளபாடங்களைப் போன்று மனித வளத்தை ஒரு மாதத்தில் வழங்க முடியாது.

இன்னும் ஒரு மாதத்திற்குள் 50 வைத்தியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நியமனம் வழங்கவுள்ளோம்.

தாதியர் பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டில் நிவர்த்தியாகும். யாழ்ப்பாணம், வவுனியா தாதியர் கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் மூலம் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும்.

வைத்தியசாலை நிர்வாகமும் அரச அதிபரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்காலிகமாக பணிபுரியும் கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும். தற்போது 77 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுகிறது.

வடபகுதியில் மனித வளங்களின் பிரச்சினைக்கு இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் செல்வது தான் காரணம். வடபகுதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் பலர் மருத்துவத் துறைக்கு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்றனர்.

ஆனால், வைத்தியர்கள் ஆனவுடன் வடபகுதியைச் சேர்ந்த அனைவரும் தென்பகுதியிலேயே தமக்கு நியமனம் வேண்டுமென என்னை நேரில் சந்தித்து கேட்டுக் கொள்கின்றார்.

இதனால் வடபகுதியில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் எனக்கு பிரச்சினையாக இருக்கிறது.

இங்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் பல்வேறு தேவைகள் கேட்கப்பட்டது. ஆனால், நாட்டின் ஏனைய பகுதி வைத்தியசாலைகள் போன்று மருந்துப் பொருட்களைச் கேட்கவில்லை. எனவே இங்கு மருந்துத் தட்டுப்பாடு இல்லையென நினைக்கிறேன். இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவும் இலங்கையும் இணைந்துள்ளன

## பத்திரிகையாளர் மாநாட்டில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நேற்று ஸ்ரான்லி வீதியில் மத்திய வங்கி ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்;

வடக்கு அபிவிருத்தி முன்னேறிக் கொண்டு வருகிறது. தற்போது பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்துள்ளன.

விரைவில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கப்பல் போக்குவரத்து தலைமன்னார்–இராமேஸ்வரம், கொழும்பு–தூத்துக்குடி இடையே இடம்பெறவுள்ளது. இதனால் இந்தியாவுடன் போக்குவரத்து அதிகரிக்கும்.

அத்துடன் வடக்கின் அபிவிருத்தி முன்னேற்றமடையும். மேலும் வடக்கில் வங்கிகள் ஊடாக கடந்த வருடம் 21ஆயிரம் கடன்கள் பெறப்பட்டுள்ளது. கிழக்கில் 20ஆயிரம் கடன்கள் பெறப்பட்டுள்ளது.

எனவே வங்கியின் கடன் வழங்கலானது பெறப்படும் மக்களால் திருப்பி செலுத்தக் கூடிய தன்மையில் தங்கியுள்ளது.

இவ்வாறான நிதிப் பங்களிப்புகள் வடக்கின் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யும். தற்போது இந்தியாவும் இலங்கையும் வடக்கின் அபிவிருத்தியில் இணைந்து முன்னேற்றகரமான பல செயற்பாடுகள் மேற்கொள்கின்றன.

இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (ந-5)

## ரைகொண்டோ காட்சி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் ரைகொண்டோ ஆலோசகர் மாஸ்ரர் Kisulee உட்பட ஆலோசகர்கள் குழு மற்றும் யாழ்ப்பாணம் ரைகொண்டோ . வீர/வீராங்கனைகள் கலந்து கொள்ளும் ரைகொண்டே காட்சி நிகழ்வொன்று இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும்.

என பலாலி படைத்தலைமையகம் அறி வித்துள்ளது. (ந)

# அரிசிமா மூலம் பாண் தயாரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரிசிமா மூலம் பாண் தயாரிக்கும் போராட்டம் ஒன்றை பொறியியல் சேவை, பொது வசதிகள் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச முன்னெடுத்து வருகின்றார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், வியாங்கொடையில் அவ்வாறான ஒரு அரிசிமா பதனிடும் தொழிற்சாலை திறக்கப்பட்டுள்ளதாகவும் 200 வெதுப் பக (பேக்கரி) உரிமையாளர்கள் இதற்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மா போல் மிக மென்மை யாக அரிசிமாவை அரைப்பது தொடர்பான தாமதமே இது பின்னடைவாவதற்குக் காரணம் என்றும் தற்போது 50 இற்கு 50 என்ற விகிதத்தில் கோதுமை மாவையும் சேர்த்தே புதிய அரிசிமா பாண் தயாராகவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)


மெல்போர்னில், டென்மார்க் டென்னிஸ் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கிக்கு, கிரிக்கெட் விளையாடுவது குறித்து பயிற்சி வழங்கிய அவுஸ்திரேலிய வீரர் பீட்டர் சிடில்.

# உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருடன் சர்வதேச அரங்கிலிருந்து முரளி ஓய்வு

நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 19ஆம் திகதி முதல் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறும் உலகக்கிண்ணத் தொடர் ஏப்ரல் 2ஆம் திகதி முடிபடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தவரான முரளிதரன் கடந்த யூலை மாதம் 800 ஆவது விக்கெட்டை வீழ்த்திய பின் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. 339 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் அவர் 517 விக்



கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந் நிலையில் உலகக் கிண்ணத் தொடருடன் தனது கடைசி தொடர் எனவும் அதன் பின் ஓய்வு பெறவுள்ளதாகவும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.பி.எல். போட்டிகளில் தொடர்ந்து விளையாடவுள்ளதாக தெரிவித்த அவர் நியூசிலாந்து அல்லது இங்கிலாந்தில் இதே போன்ற பணிகளை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

இது எனது நான்காவது உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டி 1996ஆம் ஆண்டு நாம் உலகக் கிண்ணத்தை வென்றோம் 2007ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்குத் தெரிவானோம் இம் முறை சுற்றுப்போட்டி எனக்கும் இலங்கை ரசிகர்களுக்கும் மறக்க முடியாததாக இருக்கும் என முரளிதரன் கூறினார்.

# மார்ஷ், பொல்லிங்கர் அபாரம்
# ஆஸி.அணிக்கு அடுத்த வெற்றி


(ஹாபாட்)

மார்ஷ், பொலிங்கரின் அபார ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், 2 இருபது-20 மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது.

இதில் ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற 2 இருபது-20 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையிலுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்து நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது. இத் தொடரில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று ஹாபாடில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மார்ஷின் சிறப்பான சதத் தின் மூலம் 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷோன் மார்ஷ் 114 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 110 ஓட்டங்களையும் வைற் 45 ஓட்டங்களையும், பொல்லிங்கர் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட)30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஷாஷட், திரிம்லெற் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பிரேஷ்மன், யார்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 231 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பொல்லிங்க ரின் வேகத்தில் சிக்கி 45 ஓவர்க ளில் 184 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இதில் திரோட், பெல் ஆகியோர் தலா 32 ஓட்டங்களையும் யார்டி 22, மோர்சன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பொல்லிங்கர் 4 விக்கெட்டுகளையும் பிரெட்லி 2 விக்கெட்டுகளையும் வோட்ஷன், சிமித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் அவுஸ்திரே லிய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற் றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு சதமடித்து அடித்தளம் அமைத்த மார்ஷ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

# அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ்
# நான்காவது சுற்றில் பெடரர், வோஸ்னியாக்கி

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியன் ஓபன் டெனிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ரஷ்யாவின் மரியா சரபோவா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறியுள்ளனர்.

மெல்போர்னில் அவுஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் உலகில் நம்பர்-1 வீராங்கனையான டென்மார்க்கின் வோஸ்னியாக்கி சுலோவேகியாவின் டொமனிகா சிபுல்கோவாவை சந்தித்தார்.

இதில் வோஸ்னியாக்கி 6:4, 6:3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று மூன்றாவது முறையாக (2008, 2010, 2011) இத் தொடரின் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஹெனின் அவுட்

மற்றொரு 3ஆவது சுற்றுப்போட்டியில் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 4:6, 6:7 என்ற நேர் செட்டில் ரஷ்யாவின் கஸ்னட்சோவாவிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

## வீனஸ் காயம்

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம் காயம் காரணமாக பாதியில் விலகினார். இதனால் இவரை எதிர்த்து ஆடிய ஜேர்மனியின் ஆன்டிரியா பெட்கோவிச் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

மற்ற போட்டிகளில் ரஷ்யாவின் மரியா சரபோவா, சீனாவின் நா லீ, இத்தாலியின் பிரான்சஸ்கா ஷியவோனே, பெலாரசின் விக்டோரியா அசரன்கா உள்ளிட்டோர் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

## பெடரர் சாதனை

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் உலகின் நம்பர்-2 வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர், பெல்ஜியத்தின் சேவியர் மாலிசியை எதிர்கொண்டார். இதில் பெரடர் 6:3, 6:3, 6:1 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார். இதன் மூலம் பெரடர் அவுஸ்திரேலிய ஓபனில் அதிக வெற்றிகளை குவித்த வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார்.

கடந்த 2000ம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனில் முதல்முதலாக களமிறங்கிய இவர், இதுவரை 57 வெற்றிகளை பெற்றுள்ளார். முன்தாக பெடரரின் குருநாதரான சுவிட்ஸர்லாந்தின் ஸ்டீபன் எட்பர்க் முதலிடத்திலிருந்தார்.

# பால்மா விலையை அதிகரிக்க கோரிக்கை

பால்மா விலையை உயர்த்துவதற்கு பால்மா நிறுவனங்கள் அனைத்தும் அனுமதி கோரியுள்ளதாக வர்த்தக விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அனைத்து பால்மா நிறுவனங்களும் கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து பால்மா விலையை உயர்த்த அனுமதி கோரி வருகின்றன.

மெலிபோன்ற உள்ளூர் நிறுவனங்கள் தாம் நஷ்டத்தை அனுபவிப்பதாகக்கூறி அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளன என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இக்கோரிக்கை தொடர்பாக பால்மா நிறுவனங்களுக்கும் அமைச்சுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் அவர் கூறினார். (ந-5)

# கங்குலிக்கு வாய்ப்பு கொச்சி அணி மறுப்பு

ஐ.பி.எல்.ஏலத்தில் புறக்கணிக் கப்பட்ட கங்குலி கொச்சி அணியில் வாய்ப்பு பெறுவார் என்றுசெய்திகள் வெளியாகின. இதனை கொச்சி அணியின் நிர்வாகம் மறுத்துள்ளது. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.)சார்பில் கடந்த 3 ஆண்டுகளாக இருபது-20 தொடர் வெற்றிகரமாக நடந்தது.

இதில் 2008 ,2010 தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக இருந்தவர் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி. நான்காவது தொடருக்கான ஏலத்தில் கொல்கத்தா உட்பட 10 அணிகளின் உரிமையாளர்களில் ஒருவர் கூட இவரை ஏலத்தில் எடுக்கவில்லை. இதனால் கொல்கத்தாவில் சாருகானுக்கு எதிராக போராட்டங்கள்நடந்தன. இதன்பின் இவரை சமாதானப்படுத்தும் முயற்சிகள் நடந்தன.

இந்நிலையில் கொச்சி அணி கங்குலியை சேர்த்துக்கொள்ள முன்வந்துள்ளது. இந்த அணியில் லக்ஷ்மன் தவிர வேறு பிரபலமான வீரர்கள் யாரும் இல்லாததால் கங்குலியை சேர்ப்பதற்கு ஐ.பி.எல்.கட்டுப்பாட்டுக்குழுவை கொச்சிநிர்வாகம் அணுகியுள்ளது. ஐ.பி.எல்.விதிப்படி சர்வதேச போட்டி களில் பங்கேற்ற வீரர்களை பொது ஏலத்தில் மட்டுமே எடுக்க முடியும். தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்ய முடியாது. இதனால் கங்குலி விடயத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கொச்சி மறுப்பு: இதனிடையே கங்குலி தொடர்பான செய்திக்கு கொச்சி அணி நிர்வாகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து அணியின் சக உரிமையாளர் கெய்க்வாட் கூறுகையில், அணியில் கங்குலியைச் சேர்ப்பது குறித்து அவரிடம் எதுவும்பேசவில்லை. அந்நிலையில் இது குறித்த கேள்விகளுக்கு இடமில்லைஎன்றார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.மார்க்கண்டு செல்லம்மா கருணாநிதி அவர்கள் கல்வியியல் துறைப் பேராசிரியர் பட்டம், பதவி பெற்றமையை எம் வாழ்நாளில் கண்டதையிட்டு வாழ்த்தி மகிழ்கின்றோம்.



(C-2237)

திணைப்புலம் மயிலிட்டி, அல்வாய்.

கலைஞர். ம.கணேசலிங்கம் O.A க.கமலாதேவி குடும்பத்தினர்.

## ஜனாதிபதி...

துச் செல்வது உண்டு. சில சந்தர்ப்பங்களில் அவர் இல்லாமல் செல்வதும் உண்டு. செயலாளரை கூட அழைத்துச் செல்வது ஜனாதிபதியின் விருப்பத்தைச் சார்ந்ததே எனக் கூறினார். (ந-5)

## அவசர...

பட்ட நிலையில் 118 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்த நிலையில் அவசரகால சட்ட நீடிப்பு மீதான விவாதம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன் அந்த தினம் வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

அவசர காவலச் சட்டத்திற்கு ஆதரவாக அரசும் அரசை சார்ந்த கட்சிகளும் வாக்களித்ததோடு எதிராக ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஜே.வி.பியின் இரண்டு உறுப்பினர்களும் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். (ந-5)

## பொலிஸாரால்...

பையும் ஏற்படுத்தியுள்ளது.

கயல் என்ற அங்கயற்கன்னி இலங்கையில் போர் நிறுத்தம் கோரிய தமிழகப் போராட்டங்களில் முன்னின்று நடத்தியவர்களுள் ஒருவர். அவர் குறித்த எந்தத் தகவலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவர் குறித்த எந்தத் தகவலுமில்லை. ஒரு மிகச் சிறந்த மனித உரிமைப் போராளியான கயலின் கைது மிகப் பெரிய அச்சுறுத்தல் என்று கருதப்படுகிறது. இவர் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக பல்வேறு வழக்குகளை சமூக அர்ப்பணிப்போடு நடத்திவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சட்டவிரோத...

அகற்றி வருகின்றனர் என்றார். இதேவேளை மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 15ஆயிரம் வேட்பாளர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்ப்பதாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ந-5)

# லண்டன் அமெ.தூதரகத்திற்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கா அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதை கடுமையாகக் கண்டித்து பிரித்தானியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று ஏற்பாடு செய்திருப்பதாக தமிழ் மாணவர்கள் மற்றும் இளையோர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அந்நாட்டு அதிபர் ஒபாமாவைசந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இலங்கையின் போர் குற்றங்களை மறைக்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த இதனைப் பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதியோடு அதிபர் ஒபாமா எப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடக்கூடாது எனவும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் கோரிக்கைகளை முன்வைத்தும் இப் போராட்டம் நடைபெறவுள்ளதாக இளையோர்கள் தெரிவித்துள்ளனர். (ந-5)

## ஐ.நா.நிபுணர்...

தவிரவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவ்வாறான சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாட்டுடன் வருகைதரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே பத்துநாட்கள் தங்கியிருக்கும் உத்தேசத்துடன் அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அதற்கு முன்பே நாடுதிரும்பலாம் என்றவாறாக ஜனாதிபதி மாளிகைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# இலங்கையில் மின்சார புகையிரத சேவை 2013ல்

இலங்கையின் முதலாவது மின்சார புகையிரத சேவை எதிர்வரும் 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும் என புகையிரத திட்டமிடல் இயக்குநர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார்.

மின்சார புகையிரத சேவைகள் முதன் முதலாக வியாங்கொடைக்கும்- களுத்துறை தெற்கு புகையிரத நிலையங்களுக்கும் இடையே நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சேவைக்காக சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 15இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில புகையிரத நிலையங்களின் அளவுகள் மாற்றப்பட உள்ளதாக தெரிவித்த திட்டமிடல் பிரிவின் இயக்குநர் அந்த பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் புகையிரத திட்டமிடல் இயக்குநர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார். (ந-5)

## இலங்கை இன நல்லிணை...

தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகத்தின் வெளிவிவகாரக் கொள்கையில் தென் மற்றும் மத்திய ஆசியாவின் முன்னுரிமைகள் என்ற தலைப்பில் அமெரிக்காவின் டெக்சாஸிலுள்ள ரைஸ் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியபோதே இலங்கைக்கான அமெரிக்க முன்னாள் தூதுவர் றொபேட் ஓ பிளேக் இவ்வாறு கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்ததைத் தொடர்ந்து அந் நாட்டின் பொருளாதாரம் துரித வளர்ச்சியைக் கண்டுள்ள போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்கள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

மத்திய ஆசியா தொடர்பான தனது உரையில் அதிக கருத்துக்களை வெளியிட்ட றொபேட் ஓ பிளேக் இலங்கை மற்றும் நேபாளம் ஆசிய நாடுகளில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த உள்நாட்டுப் போர் முடிபுக்கு வந்து அந் நாடுகளில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவியாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் கருத்தில் எடுத்துச் செயற்படும் எனத் நான் நம்புகின்றேன்.

தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கு துணை இராஜாங்கச் செயலாளர் என்ற வகையில் தெற்கே இலங்கை தொடக்கம் வடக்கே கஸகஸ்தான் வரைக்கும், மாலைதீவுமுதல் பூட்டன் வரைக்குமான பிராந்தியங்களுக்கு றொபேட் ஓ பிளேக் பொறுப்பாகச் செயற்பட்டு வருவதுடன் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை பிறிதொரு தூதுவர் ஒருங்கிணைத்து வருகிறார்.

இப் பிராந்தியம் குறித்து பராக் ஒபாமா அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பாகக் குறிப்பிடுகையில் மத்திய மற்றும் தென்னாசியாவைப் பொறுத்தவரை தமக்கு மூன்று முக்கிய இலக்குகள் இருப்பதாகவும் றொபேட் ஓ பிளேக் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் சர்வதேச முயற்சிகளுக்கு ஆதரவளித்தால் இந்தியாவுடனான மூலோபாய உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுடன் உறுதியான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்பவையே அவை என குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## ஐ.நா...

யாடினார்.

இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ள கதரீன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மக்களின் நிலைமைகளையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சன் சீ கப்...

வுக்கு சன் சீ கப்பலை அனுப்புவதற்கு இவர் உதவியிருந்தாலும் அக் கப்பலின் பிரதான ஏற்பாட்டாளர் இவரல்ல என கனேடிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஏனைய கப்பல்கள் மூலம் குடியேற்றவாசிகளை கனடாவுக்கு அனுப்பும் பாரிய மனிதக் கடத்தல்களின் பின்னணியில் இவர் இருந்தார் என இவ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ந-5)

## வடக்கு மக்களின்...

அவர் கூறினார்.

இலங்கையில் எந்தப் பகுதிக்கும் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருக்கின்றது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் ஒரு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் அவசர தேவைகளுக்காக 51 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை அரசுக்கு ஐ.நா. வழங்கியுள்ளது.

முதன்மைத் திட்டங்களுக்காக அவசர மத்திய திட்டத்தின் ஊடாக ஆறு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கவுள்ளோம்.

வட மாகாணத்தை மீளக் கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபையும் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களும் இலங்கை அரசுக்கு உதவத் தயாராக உள்ளன என்பதை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்தபோது தெரிவித்துள்ளேன்.

ஐ.நா. முகவர் நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி முகவர் நிறுவனங்களுக்கும் இடையிலான உறவை கட்டியெழுப்பவேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இலங்கையில் பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்ட போதிலும் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்ற அடிப்படையிலும் நேரம் போதாமையின் காரணமாகவுமே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாத்திரம் என்னால் விஜயம் செய்ய முடிந்தது என்றார்.

மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைவந்த ஐக்கியநாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும் அவசர உதவிகளுக்காக பிரதி இணைப்பாளருமான கதரீன் பிரேக் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்ததுடன் இலங்கை அரசின் பிரதிநிதிகளையும் சந்தித்தார். (ந-5)


**Organ/Violin Notes**

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம் ஆகிய இசைக் கருவிகளுக்கான 310 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் ஆகிய பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**கரவீணா இசை மன்றம்**

(3555) 75, கோவில் வீதி, நல்லூர், T.P.:0777031293


## மரண அறிவித்தல்

### திருமதி நீலாம்பிகை சுந்தரலிங்கம்

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீலாம்பிகை சுந்தரலிங்கம் (புனிதம்) 20.01.2011 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புத்திரியும், கொக்குவில் தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகளும், செந்தூரன் (கனடா), சகிலன், வாசுகி, பிரதீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற அன்னலெட்சுமி, ஞானேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், இரத்தினபூபதி மற்றும் சண்முகலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும், ரூபிகா, மேனகா, பிரேமகாந்தன், ரேணுகா ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.01.2011 நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கோகுவல மலர்ச்சாலையில் நாடத்தப்பெற்று, பூதவுடல் கோகுவல மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.இல. 0779987057 தகவல்
பம்பலப்பிட்டி,தொடர்மாடி H-BLOCK. குடும்பத்தினர்.
(க-2239)


**புலமைப் பரிசில்-2011**

பயிற்சிப் பரீட்சை ⑦ல் அதிகூடிய புள்ளி பெற்றோர்

- க.கியூறி- 178 (புனித ஜோண் பொஸ்கோ)
- ந.கஜேந்திரன் - 169 (புனித ஜோண் பொஸ்கோ)
- ஜெ.ஆகாஷ் - 163 (புனித ஜோண் பொஸ்கோ)

அடுத்த பரீட்சை ⑧
23.01.2011 (ஞாயிறுதோறும்)
பரீட்சை நேரங்கள்
காலை 8.00 / 9.00 /10.00
மாலை 2.00 / 3.00 / 4.00

விரும்பிய நேரங்களில் வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.

**நாவலர்**
ஆனைப்பந்தி சந்தி,யாழ் நகர்.
(சி-2240)



**ACCA**

Association of Chartered Certified Accountants
Computer Based Educatian (CBE)

புதிய பிரிவுகள் ஆரம்பம்:22,23,29,30 /01/2011

**அனுமதிக்குரிய தகுதிகள்:-**

- ☆ 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் அல்லது
- ☆ க.பொ.த. (சா/த) தகுதிகள் அல்லது
- ☆ வெளிநாடுகளிற்கு செல்ல விரும்புபவர்கள்

**Jaffna Technical Institute (JTI)**
(Approved Tution Provider)

No.46, மணிக்கூட்டு வீதி, /
No.92/1 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். ACCA
T.P.: 0215670345
E-mail:jtiedu@gmail.com
(சி-2241)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.